Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மாசி – 25 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 முஹர்ரம் 27 (09.03.2005) புதன்கிழமை இதழ்:160




## சொல்ஹெய்ம் இன்று லண்டன் பயணம்!

(ஒஸ்லோ)

நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் இன்று லண்டனுக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து பேச்சு நடத்தவிருப்பதாகத் தெரியவருகிறது.

நோர்வே அரசாங்க வட்டாரங் கள் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்து பேச்சு (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஊடாக நிதியுதவி; ஐ.தே.கட்சி வரவேற்கிறது!

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்குப் பகுதி மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் விடயத்தில் அரசாங்கம் நீதியான முறையைக் கொண்டிருக்கவில்லை. திட்டமிட்டு இந்தப் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டன.

எனவே, விடுதலைப் புலிகளிடம் நேரடியாக நிதியுதவி வழங்குவதே நியாயமானது என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு பகுதியில் பாதுகாப்பு அதிகரிப்பு!

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை அடுத்து நகரப்பகுதி மற்றும் பல பிரதேசங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் நெவில் விஜேசிங்க தெரிவித்தார்.

பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் மாவட்டத்தின் பல பிரதேசங்களில் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.

நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பொலிஸார் விசேட சோதனைச்சாவடி (12 ஆம் பக்கம் பார்க்க)

# விரைவில் நாடாளுமன்றத்துக்குத் தேர்தல்

# கொழும்பு அரசியல் ஆய்வாளர்கள் கணிப்பு!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டு ஒரு வருடம் நிறைவடையும் நேரத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மற்றொரு தேர்தல் நடத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டணியில் பிரதான பங்கு வகிக்கும் ஜே.வி.பியுடன் தொடர்ந்தும் இணக்கப்பாட்டுடன் அரசாங்கத்தை நடத்திச் செல்ல முடியாதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருதுவதே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - அடுத்த தேர்தல் விரைவில் நடைபெறுமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் கூறியிருந்தார். ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணிக்குள் நிகழும் உள்ளகப் பிரச்சினையால் அரசாங்கம் நீண்டநாட்களுக்கு நிலைத்திருக்காது.

அண்மைய சம்பவங்களும் இதனையே எடுத்துக்காட்டுகின்றன. எனவே, ஜனாதிபதி சந்திரிகாவும் பிறிதொரு தேர்தலுக்குத் செல்வதையே விரும்புகின்றார். இவ்வாறு அவர் தேர்தலை நடத்துவாராக இருந்தால் அது ஐந்து வருடத்திற்குள் நடத்தப்படும் நான்காவது தேர்தலாக இருக்குமெனவும் அந்த வட்டாரங் கள் மேலும் தெரிவித்துள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் அமைக்கப்பட்டு அடுத்த மாதம் 2 ஆம்திகதி ஒரு வருடம்பூர்த்தியாவது குறிப்பிடத்தக்கது.

## கதிர்காமர் -ஜே.வி.பி. கூட்டணியே போர்நிறுத்தத்துக்கு அச்சுறுத்தல்!

### குற்றம் சாட்டுகிறது ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்படிக்கையை உறுதியாகக் கடைப்பிடிப்பதாக சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவிக்கும் அதேநேரம் – அதற்கெதிரான செயற்பாடுகளை லக்ஷ்மன் கதிர்காமரும் ஜே.வி.பியினரும் எடுத்து வருகின்றனர்

தான் பிரதமராக வேண்டும் என்பதற்காகவே லக்ஷ்மன் கதிர்காமர் – ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தி

## படுகொலைகளைத் தடுக்க ஆயுததாரிகளிடம் ஆயுதங்கள் முதலில் களையப்பட வேண்டும்!

### மட்டு – அம்பாறை சிறப்புத்தளபதி கேணல் பானு

(லண்டன்)

மட்டக்களப்பில் இடம்பெறும் படுகொலை

இது குறித்து மட்டு – அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு பி.பி.சியின்

# கதிர்காமர் -ஜே.வி.பி. கூட்டணியே போர்நிறுத்தத்துக்கு அச்சுறுத்தல்!

## குற்றம் சாட்டுகிறது ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

தான் பிரதமராக வேண்டும் என்பதற்காகவே லக்ஷ்மன் கதிர்காமர் – ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன இவ்வாறு குற்றம் சாட்டினாரா்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

லக்ஷ்மன் கதிர்காமரும் ஜே.வி.பியினரும் இணைந்து சமாதான முன்னெடுப்புக்களுக்கு பாதங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

போர்நிறுத்த உடன்படிக்கையை உறுதியாகக் கடைப்பிடிப்பதாக சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவிக்கும் அதேநேரம் – அதற்கெதிரான செயற்பாடுகளை லக்ஷ்மன் கதிர்காமரும் ஜே.வி.பியினரும் எடுத்து வருகின்றனர்.

இது – சமாதான செயலகப் பணிப்பாளருக்கும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் இடையிலான தனிப்பட்ட விரோதத்தின் வெளிப்பாடாகும்.

லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் ஜே.வி.பியினரின் செயற்பாடுகளால் இன்று போர்நிறுத்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

படுகொலைகளைத் தடுக்க

# ஆயுததாரிகளிடம் ஆயுதங்கள் முதலில் களையப்பட வேண்டும்!

## மட்டு – அம்பாறை சிறப்புத்தளபதி கேணல் பானு

(லண்டன்)

மட்டக்களப்பில் இடம்பெறும் படுகொலைகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே நடந்துவருகின்றன. இந்தப் படுகொலைகளைத் தடுத்துநிறுத்த வேண்டுமானால், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள ஆயுததாரிகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும். அவர்கள் கைதுசெய்யப்படவேண்டும் என்று மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

இது குறித்து மட்டு – அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு பி.பி.சியின் தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது –

தற்போது மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில் பல்வேறு ஆயுதக் குழுக்கள் இருக்கின்றன. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பொதுமக்களிடம் கூட ஆயுதங்கள் இருப்பதை நாங்கள் அறியக்கூடியதாக இருக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதக்குழுவுடன் தொடர்புடைய இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிலும், தளவாயிலும் நேற்றுமுன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் இரண்டுபேர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு தளவாயில் வேலாயுதபிள்ளை இலங்கேஸ்வரன் (வயது 25) என்ற இளைஞர் இனந்தெரியாத நபர்களால் அவரது வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் இராணுவத்தினருடன் இணைந்து இயங்கும் ஆயுதக்குழுவொன்றுடன் தொடர்புடையவர் எனத் தெரியவருகிறது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில் கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த அழகையா கிருபைராஜா என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இராணுவத்துக்கு தகவல் கொடுப்பவராகச் செயற்பட்டுவந்த இவர், அண்மையில் வெளிநாட்டிலிருந்து திரும்பி மீண்டும் நேற்று அதிகாலை கொழும்பு செல்வதற்காக பஸ் நிலையம் வந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

### விண்ணாணம் விநாசியர்



தேர்த்திருவிழா மாதிரி தேர்தல் திருவிழாவும் வரப்போகுதுபோல...!

# கிழக்கில் தொடரும் படுகொலைகள் சமாதான முயற்சிகளுக்கு ஆபத்து!

## கண்காணிப்புக்குழுத் தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

கிழக்கில் இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்கள் போர்நிறுத்த உடன்படிக்கைக்கும் மற்றும் சமாதான முயற்சிக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தெரிவித்துள்ளதாவது –

காட்டுமிராண்டித்தனமானதும், ஈவிரக்கமற்றதுமான இந்தப் படுகொலைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். வன்செயல்கள் அதிகரித்துச் செல்வதானது இந்த நாட்டை நிச்சயமில்லாத நிலைக்கு கொண்டுசெல்வதுடன் சமாதான முயற்சிகளுக்கும் இடையூறுகளை ஏற்படுத்தும்.

எனவே – இது தொடர்பாக நாம் இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளை கோருவது என்னவெனில் இவ்வாறான செயல்களை செய்வதன்மூலம் போர்நிறுத்த உடன்படிக்கையை பாதிப்படைய செய்ய

(12 ஆம் பக்கம் பார்க்க)


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ ஏயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR

Your friend in the skies...

# சைவவிருத்திச் சங்கம் நடத்திய சிவராத்திரி தினப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஞானபண்டிதர் சைவ விருத்திச்சங்கம் மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்திய கட்டுரை, பண்ணிசை, சைவசமய பொது அறிவு போட்டியில் முதல் மூன்று இடத்தை பெற்றவர்களின் விபரம் வெளியிடப் பட்டுள்ளது.

**பண்ணிசைப் போட்டி**

**கனிஷ்ட பிரிவு**

அ. பானுஷா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), ல. மிதுலன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), கே.கஜானன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)

**மத்திய பிரிவு**

த. ஐங்கரன் (கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயம்), த. சாயிநேசன் (கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்), ச.ஜனார்த்தனன் (கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்)

**சிரேஷ்ட பிரிவு**

ச. நிவேதினி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), க. துளசிகா (கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்), ச. சத்தியாயினி (கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்)

**சைவசமயம் பொது அறிவு போட்டி**

**கனிஷ்ட பிரிவு**

மு. அம்பாலிகா, அ. பானுஷா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) கே. கஜானன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) க. ராமரூபன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)

**மத்திய பிரிவு**

க. அகிலா (கோப்பாய் சரவண பவானந்தா வித்தியாலயம்) த. சுமன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) சோ.சுலக்சனா (கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்) யா.சிவனருட் செல்வசர்மா (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி).

**சிரேஷ்ட பிரிவு**

தி.பவித்திரா (கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்) க. அனுசன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி) ச. தனுசன் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

**கட்டுரை போட்டி**

**கனிஷ்ட பிரிவு**

சி. பவதாரணி (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) வை. கோபிசங்கர் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) க. தர்சிகன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) ல.குகப்பிரியன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்)

**மத்திய பிரிவு**

ஸ்ரீ. அருண் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) கு. பிரிந்தா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) த. பிரதீபன் (யாழ்ப்பாணம் மத்திய கலலூரி).

**சிரேஷ்ட பிரிவு**

ச.சசிரேகா (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) பா.துவாரகி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) க.சரவணன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி).

# நெல்லியடியில் நேற்று மகளிர்தின நிகழ்வு

வடமராட்சி கோட்ட பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினவிழா நேற்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

நேற்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் முதலில் பொதுச் சுடரை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இன்பம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து 2 ஆம் லெப். மாலதியின் திருவுருவப்படத்திற்கு மாவீரர் பரிதியின் சகோதரி வினோஜா ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். இதனைத் தொடர்ந்து வரவேற்புரையை பத்தினிப்பிள்ளை நிகழ்த்தினார்.

தொடர்ந்து 'சட்டத்தின் முன் சமத்துவத்திற்கான உரிமைகள்' என்னும் கருப்பொருளில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் கருத்துரையாற்றினார்.

இந்த நிகழ்வில் வடமராட்சி கோட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் அன்பு, யு.என்.எச்.சி.ஆர் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பெண் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் தற்காலிக வீடுகளில் வசிக்கும் மக்களை மகிழ்வூட்டும் நிகழ்ச்சிகளை திருமறைக் கலாமன்றத்தினர் நேற்று நிகழ்த்தியுள்ளனர். (14)


## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## கிளைமுகாமையாளர் (தற்காலிகம்) பதவிக்கான விண்ணப்பம் கோரல்

சங்கத்தின் ஆளணி நியமனத்திற்காகன கீழ்க் காணும் பதவிக்கான வெற்றிடம் எமது சங்கப் பணியாளர்களிடமிருந்தும் வெளிவாரியாகவும் கோரப்படுகின்றன. சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரத்திலேயே விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு "பொது முகாமையாளர், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை" எனும் முகவரிக்கு 21.03.2005 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் கிளை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கல்விச் சான்றிதழ், நற்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடத் தகைமையை பிறப்புச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படாவிடின் அந்த விளக்கம் குறித்த அத்தாட்சிப் படுத்தும் கடிதமும் அனுப்பப்படல் வேண்டும்.

வயது எல்லை 18 க்கும் 40 க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப் படமாட்டாது. சங்கப் பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

1. கிளை முகாமையாளர் 208/16
சம்பளத் திட்டம் } 3250 - 4500 / 60X10-65X10

தகைமைகள் :

அ) கூட்டுறவுச் சங்கஊழியர் 17 ஆம் சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (சாதாரண தரம்) பத்திரம் / க.பொ.த (சாதாரண தரம்) பத்திரத்தில் 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக கணிதம்/தூய கணிதம், சிங்களம்/தமிழ்பாஷை என்பவற்றினை உள்ளடக்கியதாக 6 பாடங்களிலான சித்தி.

ஐ.சிங்கராசா
பொதுமுகாமையாளர்
தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்

தெல்லிப்பழை,
08.03.2005

(சி-3887)



நாகம்ஸ் சுன்னாகம்
சரத்குமார், நமீதா, வடிவேலு, கபாலி நடித்த
ஏய்
கா.நே. 11.00, 3.00, 7.00,
(சி-3860)

மனோகரா திரையரங்கு
இளைய தளபதி விஜய், நதீஷா, ரவிகிருஷ்ணா நடித்த
சு★க்★ர★ன்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே)
மாறுபட்ட வேடங்களில் சூர்யா நடித்த
மாயாவி
11 ஆம் திகதி முதல்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

நிறைஞ்சனாஸ் சங்கானை
சிம்பு, சோனியா அகர்வால் நடித்த
கோவில்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி-3856)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
சிவராத்திரி தினத்தை முன்னிட்டு 07.03.2005 முதல்
விஜய், சங்கவி, சுபலக்சுமி நடித்த
நிலவே வா
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30 12.00 3.00
பலருடைய பாராட்டுதலையும் பெற்ற இத்திரைப்படம் முதல்முதலாக இலங்கையில் திரையிடப்படுகின்றது.
(சி-3857)

ராஜா யாழ்ப்பாணம்
சிம்பு (இரு வேடம்), ஜோதிகா கவுண்டமணி நடித்த
மன்மதன்
(சி-3859)
கா.நே: 10.30, 2.30, 6.30 மட்டும்


# அறுபத்தைந்து படையினர் இரத்ததானம் செய்தனர்!

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு யாழ். நகர படையினர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு இரத்ததானம் செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ். நாகவிகாரையில் வைத்து 65 படையினர் இரத்ததானம் செய்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரிகள் நாகவிகாரைக்குச் சென்று படையினரிடமிருந்து இரத்தத்தைப் பெற்றுக் கொண்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்தத்திற்கு பற்றாக்குறை ஏற்பட்டு வருவதால் மாதாந்தம் இரத்தம் வழங்குவதற்கு உதவுமாறு இரத்த வங்கி அதிகாரிகள் நாகவிகாரை பதியிடம் கோரியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

# வியாபார அபிவிருத்தி நிறுவனம் யாழில் திறந்துவைக்கப்பட்டது!

இலங்கை வியாபார அபிவிருத்தி நிறுவனம் தனது வடபிராந்தியத்துக்கான வியாபார அபிவிருத்தி நிலையத்தை நேற்றுமுன்தினம் மாலை 3.00 மணியளவில் யாழ்ப்பாணம் கோவில் வீதியில் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை வியாபார அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் செல்வி றொகாந்தி பெரேரா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மங்கள விளக்கை வியாபார அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் செல்வி றொகாந்தி பெரேரா, விடுதலைப் புலிகளின் நிதித்துறை வணிகர் ஒன்றியத் தலைவர் ஜெயராஜ் மற்றும் வியாபார அபவிருத்தி நிறுவன ஆலோசகர் கிறிஸ்தோபர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து வியாபார அபிவிருத்தி நிறுவன அலுவலகத்தை விடுதலைப்புலிகளின் நிதித்துறை வணிகர் ஒன்றியத் தலைவர் ஜெயராஜ் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், வங்கி அதிகாரிகள் மற்றும் முக்கிய வர்த்தக துறைசார் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாட்சிவிதப்பும் உதவி வழங்கலும்!

(யாழ்ப்பாணம்)

அமரர் மு. பரமேஸ்வரன் நினைவுச் சபை - வாலையம்மன் சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் நடத்தும் மாட்சி விதப்பும் மனித மேம்பாட்டு உதவி வழங்கும் நிகழ்வும் இன்று மாலை 4.30 மணிக்கு வாலையம்மன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் சி.சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் மாட்சி விதப்புரைகளை வாலையம்மன் சனசமூக நிலைய போஷகர் இ. சண்முகநாதன் வலி. கிழக்குபிரதேசசபை செயலாளர் செ.குகதாஸன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கான மனித மேம்பாட்டு உதவிகளும் வழங்கப்படவுள்ளது.


## இலங்கேஸ்வரன் சனசமூக நிலையம்
## துறையாமூலை, தென்புலோலி.
## 2005 ஆண்டின் நிர்வாகத் தெரிவு

| | |
|---|---|
| தலைவர் | : ப.ஒபேஸ்சன் |
| உபதலைவர் | : ச.கோபிராம் |
| செயலாளர் | : சி.உதயகிருஷ்ணானந்தன் |
| உபசெயலாளர் | : செ.சிறிகிருஷ்ணா |
| பொருளாளர் | : செ.தினேஸ்குமார் |
| கணக்காய்வாளர் | : மு.யோகலிங்கம் |
| போசகர்கள் | : கா.தங்கராஜா, க.கந்தசாமி. |

நிர்வாக சபை உறுப்பினர்கள் :
கா.சிவபாதம், செ.ஆனந்தவேல், செ.பத்மநாதன், செ.மதிவண்ணன், சி.கிருஷ்ணவேல், தா.செந்தில்குமார், சி.ரவீந்திரன்.

-நிர்வாகம்

(C/1080)



## காணி விற்பனை

கல்வியங்காடு சந்திக்கு அருகில் G.P.S. வீதியில், விளையாட்டு மைதானத்தின் முன்பாக, ரம்மியமான சூழலில் அழகிய வனக் கலட்டியும், சுத்தமான தண்ணீரையும் கொண்ட வளமுள்ள 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். முந்தியவர்கள் முந்தியவர்களே! பிந்தியவர்கள் பிந்தியவர்களே! *(சந்திக்கும் நேரம் மாலை 5.30 மணிக்குப் பின்பு)*

தொடர்புகளுக்கு :
38, இராச வீதி,
சட்டநாதர் கோவிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

T.P : 0777-499284

(C/1078)



## PRE CERTIFICATE
அடிப்படை ஆங்கில அறிவை மேம்படுத்தும் வளர்ந்தோருக்கான விசேட ஆங்கில பாடநெறி.

## PRE FOUNDATION
அடிப்படை ஆங்கில அறிவை மேம்படுத்தும் சிறார்களுக்கான விசேட ஆங்கில பாடநெறி

பாடநெறி விதானம் (காலம் 6 மாதம்)

- அடிப்படை ஆங்கில பேச்சுப்பயிற்சி
- ஆங்கில சொல்வளத்தை மேம்படுத்தல்
- ஆங்கில சொல் பிரயோகம், உச்சரிப்பு
- ஆங்கிலத்தில் உரையாடல்
- ஆங்கில இலக்கண தொழிற்பாட்டை மேம்படுத்தல்
- ஆங்கிலம் எழுத்துக்கூட்டி வாசித்தல்
- சிறிய பந்திகளையும், கதைகளையும் வாசித்தல்
- சிறிய பந்திகளையும், கதைகளையும் எழுதப்பயிலுதல்
- பல்வேறு பாத்திரங்களிற்கு ஏற்ப பேசுதல்.



British BUSINESS SCHOOL
Where Students Come First

BRITISH BUSINESS SCHOOL
NO.140, TEMPLE ROAD, JAFFNA.

# விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டை சர்வதேசத்துக்கு உணர்த்தவேண்டும்!

## ஒஸ்லோவில் புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன்

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டை உலகின் மனச்சாட்சிக்கு உணர்த்தும் பணியில் – தமிழ்த் தேசிய ஊடகங்கள் பலமடையவேண்டும். இந்த ஊடகங்களின் வளர்ச்சிக்கு மக்கள் உறுதுணையாக நிற்க வேண்டுமென, புலிகளின் குரல் வானொலிப் பொறுப்பாளர் தமிழன்பன் தெரிவித்தார்.



கடந்த மாதம் 7ஆம் திகதி வெலிக்கந்த பகுதியில் படுகொலை செய்யப்பட்ட மட்டு. அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள், மாமனிதர் சந்திரநேரு அரியநாயகம் மற்றும் சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்த செந்தளிர் இல்ல சிறுவர்களின் நினைவாக கடந்த சனிக்கிழமை நோர்வேயில் நடைபெற்ற நினைவு வணக்க நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒஸ்லோவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் லெப்.கேணல் கௌசல்யனின் விடுதலைப் பற்றுறுதிமிக்க உறுதியான போராட்ட வாழ்வு பற்றிக் குறிப்பிட்ட தமிழன்பன்–

தமிழீழத் தேசியத் தலைவர் போராட்டத்தை எவ்வாறு நேர்த்தியுடன் வழிகாட்டி நடத்திக் கொண்டிருக்கிறார் என்பது பற்றிய ஆழமான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் செந்தளிர் சிறுவர் நலவாழ்வு நிதிக்காக ஆண்டுதோறும் உண்டியல் மூலம் நிதி சேகரித்து வழங்கும் நோர்வே தமிழ் சிறார்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## போர் நிறுத்தத்துக்கு ஆபத்தாம்!

(கொழும்பு)

அரச படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த உடன்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வார இறுதிக்குள் 10 பேர் வரை கொலை செய்யப்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து, வன்முறைகள் மோசமடைந்து வருகின்றன. இதைத் தடுப்பதற்கு விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் முன்வர வேண்டும் எனவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கேட்டுள்ளனர்.

புல்மோட்டைசம்பவம்

## ஜனாதிபதி சந்திரிகாவால் விசாரணைக்குழு அமைப்பு!

(திருகோணமலை)

புல்மோட்டையில் முஸ்லிம்களின் மையவாடியில் புதைக்கப்பட்டிருந்த சடலங்களை இராணுவத்தினர் தோண்டியெடுத்தமை குறித்து உடன் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, இந்தச் சம்பவம் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவுக்கு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டுள்ளார்.

இந்த விசாரணைக்குழு பிரிகேடியர் எம். ஷகிர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் இராணுவ விசேட புலனாய்வு அதிகாரி மேஜர் புஜித கோனாவல, கெப்பிட்டிக் கொல்லாவ உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் பட்டேவல மற்றும் பிரிகேட் கொமாண்டர் கேணல் யு.விஜயரத்ன ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இதேவேளை – சம்பவ இடத்துக்குச் சென்ற முஸ்லிம் காங் கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை நடைபெற்று முடியும்வரை இந்த ஹர்த்தால் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு மக்களைக் கோரியுள்ளார்.

ஆனாலும், இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், நீண்ட எதிர்ப்புப்போராட்டமொன்றை தாம் நடத்தவுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மையவாடியிலுள்ள சடலங்களை நீதிமன்றின் அனுமதியின்றி எவரும் தோண்டி எடுக்கமுடியாதென ஹக்கீம் அந்தப் பகுதி மக்களிடையே உரையாற்றும்போது தெரிவித்தார்.

## புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு அரசின் முயற்சிக்கு ஜே. வி. பி எதிர்ப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் அரசின் முயற்சிக்கு ஜே.வி.பி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக இந்தக் கருத்தை வெளியிட்டார்.

சர்வதேச நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்புடன் அரசாங்கம் இணைந்து செயற்படத் தீர்மானிப்பது – சர்வதேச அங்கீகாரத்தை விடுதலைப் புலிகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் ஒரு நடவடிக்கையே.

விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தனது கட்சியுடன் ஜனாதிபதி இதுவரை கலந்துரையாடவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

## அரசசார்பற்ற நிறுவனங்களுடன் சரியான கருத்துப் பரிமாற்றம் இல்லை!

(கொழும்பு)

நாட்டுக்குள் இயங்கிக் கொண்டிருக்கும், அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் கருத்துப்பரிமாறல் சரியாக நடைபெறவில்லை என நிதி அமைச்சர் சரத்அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த நிதி அமைச்சர் –

அரசசார்பற்றநிறுவனங்களுக்கும், தமக்கும் இடையில் சரியான முறையில் கருத்துப் பரிமாறல் நடைபெறவில்லை. அதன் காரணமாகக் கடந்த நாட்களில் சிலசில கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. அதனைச் சரி செய்வதற்குத் தான் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்தித்ததாகவும் தெரிவித்தார்.

## கல்விச் சீர்திருத்தக் கூட்டத்தில் ஜே.வி.பியினர்.பங்கேற்கவில்லை

கல்விச் சீர்திருத்தம் தொடர்பான கலந்துரையாடலொன்று, கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றபோது, அந்தக் கூட்டத்தில் ஜே.வி.பியின் தலைவர் உட்பட முக்கிய உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடலில் – ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, பொதுச் செயலர் ரில்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, நந்தன குணதிலக மற்றும் விவசாய அமைச்சர் அநுர திஸநாயக்க ஆகியோரே கலந்து கொள்ளவில்லை.

இவர்களுக்குப் பதிலாகக் கலாசார அமைச்சர் விஜித ஹேரத், பிரதி விவசாய அமைச்சர் பிமல் ரத்னாயக்க, கிராமிய, பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் சுனில் ஹந்துனெத்த, ஜே.வி.பியின் அம் பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ, திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர ஆகியோரே இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு ஜே.வி.பி தலைமையால் அனுப்பட்டப்பட்டனர்.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் – அமைச்சர்களான மங்கள சமரவீர, தினேஸ் குணவர்த்தன, கல்வி அமைச்சு செயலாளர் தாராடி மெல், பல்கலைக்கழக மானியங்கள் குழுத் தலைவர் பேராசிரியர் மென்டிஸ் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்பட்டால், அமைச்சிலிருந்து வெளியேறி விடுவோமென ஜே.வி.பி எச்சரித்த பின்னர், ஜனாதிபதி தலைமையில், ஜே.வி. பியினருடன் நடந்த முதல் கலந்துரையாடல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (தே)

## அழிவுகளுக்குள்ளான பாடசாலைகளை கட்டியெழுப்ப போதுமான நிதி உள்ளது

### தாரா டி.மெல் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் அழிவுக்குளான பாடசாலைகளை மீளக்கட்டி எழுப்புவதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுளும் செய்யப்பட்டுள்ளதாக, கல்வி அமைச்சின் செயலளர் தரா டி மெல் தெரிவித்தார்.



இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் –

சுனாமி அனர்த்தத்தால் நாடு முழுவதும் பல பாடசாலைகள் முழுமையாகவும், பகுதியளவிலும் அழிவுக்குள்ளாகியுள்ளன. இவற்றைக் கட்டி எழுப்புவதற்கு அரசாங்கம் எந்த நிதியையும் ஒதுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

காரணம் சுனாமிக்கான உதவிகளில் பாடசாலைகளை மீளக்கட்டி எழுப்புவதற்கு வேண்டிய நிதி முழுமையாக கிடைத்துள்ளது எனத் தெரிவித்தார்.

## இராணுவ அதிகாரியின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது!

(வவுனியா)

வவுனியா இராணுவ முகாமில் இராணுவச் சிப்பாய்கள் சிலருக்கு வெடிமருந்தை உண்பதற்கு கட்டளையிட்ட இராணுவ அதிகாரியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இராணுவ பயிற்சி முகாமின் பின்னால் அமைந்திருக்கும் பாழடைந்த கிணறு ஒன்றுக்குள்ளிருந்து இந்தச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. சீ. 4 வகையான வெடி மருந்தை உட்கொண்டதால் 17 இராணுவத்தினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

உயிரிழந்துள்ள இராணுவ அதிகாரியே தம்மை வெடிமருந்தை உட்கொள்ள பணித்ததாக சிப்பாய்கள் தெரிவித்தனர் அதை அடுத்து இந்த இராணுவ அதிகாரி காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

## கோதுமை மாவை 27 ரூபாவுக்கு மேல் விற்கக்கூடாதென அரசு அறிவிப்பு!

(கொழும்பு)

யாழ்ப்பாணம் தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களில் அரசினால் இறக்குமதி செய்யப்பட்டு பங்கிடப்படும் ஒரு கிலோ மா 27 ரூபாவுக்குமேல் விற்பனை செய்யக் கூடாதென்று, வர்த்தக வாணிப மற்றும் பாவனையாளர்கள் அலுவல்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணப் பிரதேசத்துக்குத் தேவையான கோதுமை மாவை முழுமையாக அனுப்பி வைப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி 15 லொறிகளில் யாழ்ப்பாணத்துக்கு மா அனுப்பப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மாதாந்தம் 1500 மெற்றிக் தொன் மா தேவையாக உள்ளது.

இந்தத் தொகையை முழுமையாக நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் யாழ்ப்பாணத்தில் மா தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

யாழ்ப்பாணத்தில் மாவின் பழைய விலையான 29 ரூபா 50 சதத்துக்கே விற்பனை செய்வது அரசின் நோக்கம்.

அதேபோன்று பிரதேசங்களுக்கு அமைய, பாணின் விலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி 450, 400 கிராம், 350 கிராம், 300 கிராம் என்ற அளவுகளில் பாண் உற்பத்தி செய்வது பற்றி வெதுப்பக உரிமையாளர்களோடு கலந்துபேசி, கட்டுப்பாட்டு விலையை ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக வும் அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே மேலும் தெரிவித்தார். (தே)

## ஆளுநரின்வருகை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை மீளாய்வு செய்வதற்காக இன்று யாழ். குடா நாட்டுக்கு வருகை தரவிருந்த வடக்கு–கிழக்கு மாகாண ஆளுநரின் விஜயம் பிற்போடப்பட்டுள்ளது.

அவரது வருகைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என, யாழ். செயலக உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திரபிள்ளை அறிவித்துள்ளார்.

## 193 தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை


(கொழும்பு)

வடக்கு – கிழக்கில் உள்ள பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, அங்கு தற்பொழுது கடமை புரியும் 193 தொண்டர் ஆசிரியர்களை நிரந்தமாக்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பிரதேசங்ளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து சிறந்த முறையில அபிவிருத்தி செய்வதற்கான கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ள விசேட வேலைத் திட்டங்களுக்கு அமைய இவர்கள் நிரந்தரமாக உள்வாங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு – கிழக்குப் பாடசாலைகளில் தமிழ் மொழி மூலம் சிங்களம் கற்பிப்பதற்கும், சிங்கள மொழி மூல மாணவர்களுக்கு தமிழ் கற்பிப்பதற்கும் தொண்டர் ஆசிரியர் நியமிப்பது சம்பந்தமாக ஜனாதிபதியால் அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. இவர்களில் நிரந்தரமான சேவையில் உள்வாங்குவதற்கு அரச சேவை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தாக அதன் செயலாளருக்கு இது அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (தே)

# மொஹாலி டெஸ்டில் பாகிஸ்தான் 312 ஓட்டங்களைப் பெற்றது!



இந்திய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதலாவது நாளான நேற்று - பாகிஸ்தான் அணி 312 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பலத்த எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் நேற்று ஆரம்பமான மொஹாலி டெஸ்ட் போட்டியில் - நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் கங்கூலி, பாகிஸ்தானைத் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

சல்மான் பட்- தௌபிக் உமர் ஜோடி தொடக்க வீரர்களாகக் களமிறங்கியது. பாகிஸ்தான் அணியை வீழ்த்துவதற்காக, இந்திய அணியில் மூன்று வேகப்பந்துவீச்சாளர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

கும்ளே மட்டுமே சுழற்பந்து வீச்சாளராக அணியில் இடம்பெற்றிருந்தார்.

ஆட்டம் தொடங்கிய சற்று நேரத்திலேயே - ஸ்கோர் 11ஆக இருந்தபோது - சல்மான் பட்டின் விக்கெட்டை இர்பான் பதான் வீழ்த்தினார். இவர் 5 ஓட்டங்களை மட்டுமே எடுத்தார்.

அடுத்து தௌபிக் உமருடன் யுனுஸ்கான் இணைந்துகொண்டார். இவர் இரண்டு பவுண்டரிகளுடன் 9 ஓட்டங்களைப் பெற்றிருந்தநிலையில் - ஸ்கோர் 30ஆக இருந்தபோது ஆட்டமிழந்தார்.

யுனிஸ்கானின் விக்கெட்டை சகீர்கான் எல்.பி.டபிள்யூ முறையில் கைப்பற்றினார்.

இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டநிலையில் - இன்சமாம் களமிறங்கி அணிக்கு நம்பிக்கையூட்டினார். தௌபிக் உமர் - இன்சமாம் ஜோடி இணைப்பு ஓட்டங்களாக 59 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்கோர் 89ஆக இருந்தநிலையில் மூன்றாவது விக்கெட்டாக தௌபிக் உமர் வீழ்த்தப்பட்டார். இவர் 89 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 44 ஓட்டங்களை எடுத்தார். இவரது விக்கெட்டை பாலாஜி கைப்பற்றினார்.

இதையடுத்து இன்சமாமுடன் யூசுப் யுகானா இணைந்துகொண்டார். ஆனால், எதிர்பார்த்த அளவுக்கு யுகானா நிலைத்து நின்று ஆடவில்லை.

13 பந்துகளை எதிர்கொண்டு 6 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த நிலையில் யுகானாவின் விக்கெட்டை இர்பான் பதான் கைப்பற்றினார்.

பாகிஸ்தான் அணி நெருக்கடிக்குள்ளாகியிருந்தநிலையில் - இன்ச




மாமுடன் அசீம் கமல் ஜோடி சேர்ந்து அணியைக் கௌரவமான நிலைக்குக் கொண்டுசெல்ல உதவினார்.

ஸ்கோர் 156ஆக உயர்ந்தநிலையில் - இன்சமாம், கும்ளேயின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இவர் 92 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 57 ஓட்டங்களை எடுத்தார். இவரது ஆட்டமிழப்பின் பின்னர் சற்றுத் தடுமாறிய பாகிஸ்தான் அணி பின்னர் சுதாகரித்துக் கொண்டது.

அப்துல் ரசாக் - அசீம் கமல் ஜோடி ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கிய போதும் - ஸ்கோர் 191ஆக இருந்த போது ரசாக்கின் விக்கெட்டை பாலாஜி கைப்பற்றினார். ரசாக் 24 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 26



ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

அடுத்துவந்த கம்ரன் அக்மல், 54 பந்துகளை எதிர்கொண்டு 3 பவுண்டரிகளுடன் 15 ஓட்டங்களைப் பெற்றநிலையில் - கும்ளேயின் பந்துவீச்சுக்கு ஆட்டமிழந்தார். இவர் ஆட்டமிழந்தபோது ஸ்கோர் 239ஆக இருந்தது.

இவரையடுத்துக் களமிறங்கிய மொகமட் சமி 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோது ஸ்கோர் 282ஆக இருந்தது. இவரது விக்கெட்டையும் பாலாஜியே கைப்பற்றினார்.

இந்தநிலையில் பாகிஸ்தான் அணியின் கௌரவத்தை நிலைப்படுத்திய அசிம் கமல் - ஸ்கோர் 303ஆக இருந்தபோது - பாலாஜியின் பந்துவீச்சுக்கு போல்டாக நேரிட்டது.

இவர் 163 பந்துகளில் 14 பவுண்டரிகளுடன் 91 ஓட்டங்களை எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

நவீட் உல் ஹசனும் கனேரியாவும் இறுதி விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்து ஆடியபோதும் - பாகிஸ்தான் அணி 86 ஓவர்களில் 312 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.


கனேரியா கடைசி விக்கெட்டாக 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார். இவரது விக்கெட்டை பாலாஜி கைப்பற்றினார். நவீட் உல் ஹசன் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸில் 312 ஓட்டங்களைப் பெற்றநிலையில், இந்திய அணி இன்று பதிலுக்குத் துடுப்பெடுத்தாடவுள்ளது.

பந்துவீச்சில் பாலாஜி -5, பதான் -2, கும்ளே-2, சகீர்கான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

## விளையாட்டு

# சதுரங்கப் புதிர்



**இன்றைய கேள்வி:**

கறுப்பு நகர்த்தலை செய்து வெற்றியடைய யாது செய்தல் வேண்டும்?

*(விடை நாளை)*

**நேற்றைய கேள்விக்கான விடை:**

1... $Nxe_5$! 2.. $dxe_5$ நகர்த்தும்போது கறுப்பு பின்வருமாறு விளையாடுகின்றது. 2.. $Qh_4$+ 3.. $g_3$ $Qxc_4$

**தொகுப்பு - சி. வித்தியாதரன்.**

# நியூஸிலாந்து பயணத்தில் முரளிதரன் இல்லை!



(கொழும்பு)

நியூஸிலாந்தில் இலங்கை அணி மோதும் கிரிக்கெட் போட்டிகளில் முரளிதரன், சொய்சா ஆகியோர் இடம்பெறவில்லை.

அத்தப்பத்து தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி அடுத்தமாதம் முதல் நியூஸிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டியில் மோதவுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் இந்த மோதல்கள் நடைபெறவிருந்தன. ஆனால், சுனாமியால் இலங்கையில் பெரும் சேதம் ஏற்பட்டதை அடுத்து இந்தப் போட்டி ரத்துச் செய்யப்பட்டது.

இதன் காரணமாக மீண்டும் இந்தப் போட்டி நடக்கவுள்ளது. இந்தப் போட்டியில் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் சொய்சா ஆகியோர் ஆடமாட்டார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

தோள்பட்டையில் அறுவைச் சிகிச்சை செய்துள்ள முரளிதரன் எதிர்வரும் 17ஆம் திகதிதான் பயிற்சியை ஆரம்பிக்க இருக்கிறார். இதன்பின்னர் அவருக்கு சென்னையில் திருமணம் நடக்கவுள்ளது. முதல் டெஸ்ட் ஏப்ரல் 4இல் நடைபெறவுள்ளது.

# 600 விக்கெட்டுக்களே தனது இலட்சியமாம்!

## மக்ரா கூறுகிறார்



(கிறிஸ்சேர்ச)

டெஸ்ட் போட்டிகளில் 600 விக்கெட்டுக்களை எடுப்பதே தனது இலட்சியம் என்று அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் மக்ரா கூறியுள்ளார்.

500 விக்கெட்டுக்கள் எடுப்பதே முதலில் எனது இலக்காக இருந்தது. ஆனால், தற்போது மேலும் 100 விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவதே இலட்சியமாக உள்ளது. கணுக்காலில் செய்துகொண்ட சத்திரசிகிச்சையால் எனக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. என்னால் தொடர்ந்து சிறப்பாகப் பந்துவீச முடியும் என்ற நம்பிக்கை உள்ளதென கூறினார்.

இதேவேளை 35 வயதில் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த லிண்ட்வால் 228 விக்கெட்டுக்களும், மில்லர் 170 விக்கெட்டுக்களும் கைப்பற்றியிருந்தனர். ஆனால், மக்ரா இந்த வயதில் 481 விக்கெட்டை எடுத்துள்ளார். இன்னும் 4 ஆண்டுகள் அவர் விளையாட முடியும் என்று நியூஸிலாந்து முன்னாள் சகலதுறை வீரர் ரிச்சார்ட் ஹட்லி கூறியுள்ளார்.

# லினாரஸ் செஸ் போட்டி: இரண்டாமிடத்தில் ஆனந்த்!



லினாரஸ் சூப்பர் கிராண்ட்மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் 9ஆவது சுற்றில் உஸ்பெகிஸ்தான் வீரர் ரஸ்தம் கசிம்ட்ஷானோவை இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் வென்றார்.

இதன் மூலம் மொத்தம் 5.5 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்துக்கு முன்னேறியுள்ளார். ரஷ்யாவின் ஹரி கஸ்பரோவ் 6.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

பல்கேரியாவின் வெஸ்லின் தபோலோவ்-ஹங்கேரியின் பீற்றர் லேகோ இடையேயான ஆட்டம் டிரோவில் முடிவடைந்தது. இதையடுத்து தபோலோவ் மூன்றாமிடத்துக்குத் தள்ளப்பட்டார். அவர் 5 புள்ளிகளைச் பெற்றுள்ளார். லேகோ நான்காமிடத்தில் உள்ளார்.

இங்கிலாந்தின் மைக்கல் அடம்ஸ்-ஸ்பெயினின் பிரான்சிஸ்கோ வல்லேஜோ ஆகியோரிடையேயான ஆட்டமும் டிரோவில் முடிவடைந்தது. அடம்ஸ் 5ஆவது இடத்தில் உள்ளார்.

இந்தப் போட்டியில் இன்னும் மூன்று சுற்றுகளே மீதமிருக்கின்றன. இந்தநிலையில் சம்பியனாகும் வாய்ப்பு கஸ்பரோவுக்குத்தான் அதிகமெனக் கருதப்படுகிறது.

லினாரஸ் செஸ் பட்டத்தை ஏற்கனவே 8 முறை வென்றுள்ளார் கஸ்பரோவ்.

முதலாவது ஆட்டத்தில் தபோலோவை வென்ற ஆனந்த், அதற்குப் பிறகு தொடர்ச்சியாக 7 சுற்றுகளில் டிரோ மட்டுமே செய்தார். வென்றே தீரவேண்டிய கட்டாயத்தில் இருந்த ஆனந்துக்கு, தற்போது ரஸ்தமுக்கு எதிரான வெற்றி பெரும் ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது.

இந்த ஆட்டம் 38 நகர்த்தல்களில் முடிவுக்கு வந்தது. ஒரு கட்டத்தில் ரஸ்தமுக்கு டிரோ செய்யும் வாய்ப்புக் கிடைத்தபோதும், தவறிழைத்ததால் தோல்வியை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

தற்போது உலகத் தரவரிசையில் ஆனந்த் இரண்டாமிடத்தில் இருக்கிறார்.

# ஐ.சி.சி. தலைமையகம் இடம் மாறுகிறது!

(லண்டன்)

சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைமையகம் இங்கிலாந்து தலைநகர் லண்டனில் இயங்கிவருகிறது. சந்தைப்படுத்தல் மற்றும் நிதி அலுவலகம் மொனாக்கோவில் செயற்படுகிறது.

தலைமையகம் மற்றும் மொனாக்கோ அலுவலகங்களை டுபாய்க்கு மாற்ற சர்வதேச கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் இந்த மாற்றம் நடைபெறுமென ஐ.சி.சி. தலைவர் ஈஷான் மணி தெரிவித்துள்ளார்.

# யாழ்.இந்துக் கல்லூரி அணியை மத்திய கல்லூரி தோற்கடித்தது!



சதமடித்த றொகான்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுக்குப்பட்ட வீரர்களுக்கான சினேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் - யாழ்.மத்திய கல்லூரி அணி ஒரு இனிங்ஸ் மற்றும் 42 ஓட்டங்களால் யாழ்.இந்துக் கல்லூரி அணியை வெற்றிகொண்டது.

நேற்றுமுன்தினம் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்.இந்துக் கல்லூரி அணி, முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

43 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 110 ஓட்டங்களை யாழ்.இந்து பெற்றது. அணியின் சார்பாக உமாரதன் 48 ஓட்டங்களையும், நவஜீவன் 13 ஓட்டங்களையும், ஜனகன் 19 ஓட்டங்களையும், அரவிந்தன் 8 ஓட்டங்களையும், ஜனார்த்தனன் 5 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வியாசகன் 24 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், பிரசாத் 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 61 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 289 ஓட்டங்களைப் பெற்றது.

அணியின் சார்பாக றொகான் 104 ஓட்டங்களையும், பிரசாத் 48 ஓட்டங்களையும், நவநீத் 18 ஓட்டங்களையும், சுதர்சன், மகிந்தன் ஆகி



யோர் தலா 12 ஓட்டங்களையும், வியாசன் 8 ஓட்டங்களையும், மயூரன் 4 ஓட்டங்களையும், கலிசன் 2 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜனார்த்தன் 90 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ஹேமகுமார் 38 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், கௌசிகன் 81 ஓட்டங்



களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், நிதர்சன் 47 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்து அணி 1[illegible] ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அணியின் சார்பாக ஜனகன் 41 ஓட்டங்களையும், நிதர்சன் 18 ஓட்டங்களையும், அருண்குமார் 15ஓட்டங்களையும், கேமகுமார் 9 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மதுப்பிரியன் 35 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், வியாசன் 48 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், கலிஸ்ரன் 4 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனால் இந்தப் போட்டியில் மத்திய கல்லூரி அணி ஒரு இனிங்ஸ் 42 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

27. மனித வாழ்க்கையில் உணவுக்கு அடுத்தபடியாக நாம் முக்கியத்துவம் உடையவர்களாக உள்ளோம். மனிதன் உயிரிலும் மேலாக நேசிக்கும் அவன் மானத்தை நாம் காக்கின்றோம். சூட்டாலும், குளிராலும் மனிதனைப் பாதுகாத்து, அவனை அழகு படுத்தி அவனுக்கு சிறந்த உருவமைப்பைக் கொடுக்கின்றோம்.

.............................................................

28. நான் சக்திகளுக்கெல்லாம் மூலச சக்தியாவேன். நான் உலகில் ஜீவராசிகள் எல்லாவற்றுக்கும் பெரும் உதவி செய்கின்றேன். ஆயினும் விவசாயிகளுக்கே நான் அதிகம் உதவுவதாக சொல்கின்றார்கள். தை முதலாம் திகதி உழவர்கள் எனக்குப் பொங்கிப் படைப்பார்கள்.

.............................................................

29. நான் சூழல் கழிவுகளை உண்டு வாழ்கின்றேன். என்னால் எமது சுற்றுச்சூழல் சுத்திகரிக்கப்படும். அதனால் என்னை சுத்திகரிப்பான் எனவும் அழைப்பார்கள். எங்களிடம் கூடிவாழும் பண்பு உண்டு. ஒரு சிறு உணவு கிடைத்தாலும் பங்கிட்டே உண்போம். எங்கள் நிறம்தான் உங்களுக்குப் பிடிக்காது.

.............................................................

தரை, சுவர், கரும்பலகை, நீர் மேற்பரப்பு, திரை, மேசை மேற்பரப்பு

30. மேலுள்ளவற்றுள் நிலைக்குத்துத் தளத்திற்கு உதாரணம் தருக?

.............................................................

31. மேலுள்ளவற்றுள் கிடைத்தளத்திற்கு உதாரணம் தருக?

.............................................................

சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.


32. XX+XII என்பதன் பெறுமதியை உரோமன் இலக்கத்தை எழுதுக?

.............................................................

33. குறுக்காகவும், மேலிருந்து கீழும், மூலையில் இருந்து மூலைக்கும் கூட்டும் போது விடை 18 ஆகுமாறு 2,4,8,9,10 ஆகிய எண்களைப் பயன்படுத்தி வெற்றுக் கட்டங்களை நிரப்புக.

| | | |
|---|---|---|
| 3 | | 7 |
| | 6 | |
| 5 | | |

34. இவ்வுருவின் சுற்றளவைக் காண்க?




35. கம்பனி ஒன்றில் மா வாங்கிய பணத்தொகை ரூபா 3750 இனை கண்ணன் செலுத்த வேண்டும். ஆனால் அவரால் அப்பணத் தொகையின் 4/5 பங்கினை மட்டுமே செலுத்தமுடிந்தது. இன்னும் செலுத்துவதற்கு எஞ்சியுள்ள பணத்தொகை எவ்வளவு?

.............................................................

36. 500ml தேங்காய் எண்ணெயின் விலை ரூபா 55.00 ஆனால் தேங்காய் எண்ணெயின் விலை தற்போது லீற்றருக்கு 10.00 ரூபாவாக கூடியது. இப்போது 5 லீற்றர் தேங்காய் எண்ணெய் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?

.............................................................

37. கம்பியால் ஆன உரு ஒன்றை அமைப்பதற்கு 75cm நீளமான 8 கம்பித்துண்டுகளும் 1 m 25cm நீளமான 10 கம்பித்துண்டுகளையும் மாலா வாங்கினாள். அவள் வாங்கிய கம்பித் துண்டுகள் யாவற்றினதும் மொத்த நீளம் எவ்வளவு?

.............................................................

38. மீற்றர் ஒன்று ரூபா 25.00. 12m 50cm கம்பி ஒன்றை வாங்குவதற்காக ரூபன் 1000.00 ரூபாத்தாள் ஒன்றைக் கொடுத்தான். ரூபனுக்கு கிடைக்க வேண்டிய மீதிப்பணம் எவ்வளவு?

.............................................................

39. வெள்ளவத்தையில் வாழ்ந்த 1000 குடும்பங்களில் 1/2 பங்கினர் தமிழ் பேசுவர். மிகுதியின் 1/2 பங்கினர் சிங்களம் பேசுவர். மீதியாக உள்ளோரில் 2/5 பங்கினர் ஆங்கிலம் பேசுவர். ஆங்கிலம் பேசும் குடும்பங்கள் எத்தனை?

.............................................................

40. சதுரமுகி வடிவில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கி ஒன்றின் வெளிப்பகுதிக்கு வர்ணம் (பெயின்ட்) பூசப்படவுள்ளது. ஒரு சதுரமீற்றர் பரப்பளவுக்கு வர்ணம் பூச ரூபா 120.00 செலவாகும். அதன் ஒரு பக்கம் 9 சதுர மீற்றர் பரப்பளவுடையது. மூடிய பகுதி தவிர எல்லா வெளிப்பகுதிக்கும் பெயின்ட் பூசப்பட வேண்டும். எனின் பெயின்ட் பூச ஆகும் செலவை காண்க?


.............................................................

41. நிருதி மூலைக்கும், வாயு மூலைக்கும் இடையே அமைந்துள்ள திசைக்கு எதிராக அமைந்துள்ள திசை எது?

.............................................................

42. ஒரு வாங்கில் இருவர் அருகருகாக அமர்ந்துள்ளனர். ஒருவர் மற்றவரின் தாய், ஆனால் மற்றையவர் தாயின் மகளல்ல. அவ்வாறாயின் மற்றையவருக்கும், அவருக்கும் உள்ள உறவு என்ன?

.............................................................

43.  $25\ cm^2$ எனின் இவ்வுருவின் பரப்பளவு என்ன?

.............................................................

44. மாணவன் ஒருவன் கணிதபாடச் சோதனையில் 6 மாதங்கள் பெற்ற புள்ளி விபரம் 50,55,60,65,70,75 இதன் பிரகாரம் அடுத்தமாதச் சோதனையில் அவன் பெறத்தக்க புள்ளி எவ்வளவு?


.............................................................

45. சதுரம் ஒன்றுக்கும், சமபக்க முக்கோணி ஒன்றுக்கும் இடையேயான ஒற்றுமை ஒன்றை எழுதுக?

.............................................................

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd
ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்






# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2005

◆ மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை அருகேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக?

01. 50/100 என்னும் பகுதி நிழற்படுத்தப்பட்டுள்ள உரு




02. பொருட்கள் வெப்பத்தினால் விரிவடையும் பண்புடையவை. இந்த இயல்பை அடிப்படையாகக் கொண்டு நாளாந்த வாழ்வில் பல்வேறு கருமங்கள் நடைபெறுகின்றன. கீழ்வரும் சந்தர்ப்பங்களில் வெப்பத்தின் விரிவு பயன்படாத சந்தர்ப்பம் எது?

i) வண்டியில் சில்லுக்கு வளையமிடும் போது வளையத்தைச் சூடாக்கல்.

ii) ரயில் தண்' வாளங்களுக்கிடையே இடைவெளி விடப்பட்டிருத்தல்.

iii) மோதிரத்தை விரலில் இருந்து கழற்றுவதற்காக மோதிரத்தைச் சூடாக்கல்.

iv) சோடா மென்பானங்கள் போத்தலில் முழுமையாக நிரப்பப்படாது விடுதல்.

03. விழா ஒன்றில் கலந்து கொண்ட பியதாசா மயக்கமடைந்து விழ அவரை விழ விடாது ஆபூபக்கர் தாங்கிப் பிடித்தார். இதை அறிந்த பாலசுப்பிரமணியம் குளிர்நீருடன் பியதாசாவை நோக்கி வந்தார். ஸ்ரீபன் பியதாசாவை தனது காரில் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார்.

i) அந்த விழாவில் கலந்து கொண்ட யாவரும் தமிழராவர்.

ii) அந்த விழாவில் முஸ்லிம்கள எவரும் கலந்து கொளளவில்லை.


iii) அந்த விழாவில் கலந்துகொண்டவர்கள் பியதாசாவின் உறவினர்கள்.

iv) அந்த விழாவில் பல இன மக்களும் கலந்து கொண்டனர்.


04. மயூரன், கலாகரன், பிந்துரன் ஆகிய மூவரும் உயரமான ஆண்கள், சுதாமதி, காந்திமதி, இருவரும் உயரம் குறைவான பெண்கள். சுதாமதி பிந்துரன் ஆகிய இருவரும் ஐஸ்கிறீம் உண்பதில்லை. இவர்களில் எவர் ஐஸ்கிறீம் உண்பவரும் உயரம் குறைவானவரும் ஆவார்.

i) சுதாமதி ii) காந்திமதி iii) மயூரன் iv) கலாகரன்


05. கீழ்வரும் உருக்களில் வித்தியாசமான உரு எது?




06. தானியங்கள், அரிசி, மண்ணெய் என்பவற்றுக்குரிய அடங்கல் வரிப்படம்.




◆ கோலத்தை இனங்கண்டு இடைவெளியில் அமையப் பொருத்தமான எண்ணுக்குரிய விடையின் இலக்கத்தை அருகே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக?

07. 


(1) 5 (2) 6 (3) 9

08. 


(1) 100 (2) 120 (3)144

09. 


(1) 24 (2) 28 (3)32

10. 


(1) 100 (2) 130 (3)160

11. 


(1) 7 (2) 8 (3)9

◆ சரியான விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

12. கண்ணன் கடைக்குச் சென்று 100 ரூபா தாள் ஒன்றைக் கொடுத்து 1 கிலோ சீனி, 750 கிராம் அரிசி, 1/2 கிலோ பருப்பு, 1 கிலோ உப்பு ஆகியவற்றை வாங்கினான். கடைக்காரர் அவனுக்கு மீதிப்பணமாக இரண்டு இரண்டு ரூபாய் குற்றிகளையும் இரண்டு 1.00 நாணயம் ஆகியவற்றை வாங்கினான். ஒரு கிலோ சீனி 31.00 ரூபாவும், ஒரு கிலோ அரிசி 36.00 ரூபாவும், ஒரு கிலோ பருப்பும் 51.00 ருபாவும் எனின் ஒரு கிலோ உப்பின் விலை என்ன?


.............................................................

13. 29 என்னும் எண் குறிக்கும் உரோமன் இலக்கத்தைப் பெறுவதற்கு 7 தீக்குச்சிகள் தேவை. 40 என்னும் எண் குறிக்கும் உரோமன் இலக்கத்தைப் பெறுவதற்கு எத்தனை தீக்குச்சிகள் தேவை?

.............................................................

14. ஒரு குற்றச் செயல் இதனைச் செய்ய முயற்சி செய்தால் தண்டனை கிடைக்கும். ஆனால் செய்து முடித்தாலோ தண்டனை இல்லை. இது என்ன குற்றம்?
.....................................................

15. 4m நீளமும், 2m அகலமும், 5m உயரமும் கொண்ட குழி ஒன்றில் இருந்து வெட்டி எடுக்கக்கூடிய மண் எவ்வளவு?
.....................................................

16. 
அருகே உள்ள மணிக்கூட்டின் மணிக் கம்பிக்கும், நிமிடக் கம்பிக்கும் இடைப்பட்ட பகுதி பின்வருவனவற் றுள் எக்கோணத்தால் காட்டப்படும்.

i) கூர்ங்கோணம் ii) செங்கோணம்
iii) விரிகோணம் iv) நேர்கோணம்

17. பின்வரும் படங்களில் பொருத்தமற்ற சோடிகள் காணப் படும் படத்தின் கீழ்க் கீறிடுக.


(1) (2) (3) (4)

◆ கீழ்வரும் தகவல்களை வாசித்து திருத்தமான விடையை எழுதுக.

18. i) பூனை, ஆடு அளவு பெரியதெனின் கூட்டில் S என எழுதுக. ( .......... )
ii) ஆடு, பூனையிலும் சிறியதெனின் கூட்டில் U என எழுதுக. ( .......... )
iii) ஆடு, பூனை இரண்டும் நாலுகால் உடையவை எனின் கூட்டில் M என எழுதுக. ( .......... )
iv) ஆடு, பூனை இரண்டும் முட்டையிடுபவை எனின் கூட்டில் என Y எழுதுக. ( .......... )

19. i) கறுப்பு நிறமானவையெல்லாம் காகம் எனின் △ இற்கு நிறம் தீட்டுக.
ii) மாணவர்களுக்கு 50 வயது இருக்கும் எனின் ▭ இற்கு நிறம் தீட்டுக.
iii) துவிச்சக்கர வண்டிக்கு 4 சில்லு இருக்குமெனின் ○ இற்கு நிறம் தீட்டுக.
iv) மனிதர்களில் ஆண்பெண் வேறுபாடு உண்டெனின் ◇ இற்கு நிறம் தீட்டுக.

20. இங்கே காட்டப்பட்டுள்ளது.



i) எங்கள் தேசிய இலச்சினை எனின் புள்ளிக்கோட்டில் மரியாதை என எழுதுக?
.....................................................
ii) தேசிய கொடியெனின் புள்ளிக்கோட்டில் வீரம் என எழுதுக. ..........................................
iii) மதச் சின்னம் ஒன்று எனின் புள்ளிக்கோட்டில் வழிபாடு என்று எழுதுக. ..........................................

iv) எல்லா இனத்தவரையும் குறிப்பது எனின் புள்ளிக் கோட்டில் ஒற்றுமை என எழுதுக.
.....................................................

◆ கீழ்வரும் படமானது பாடசாலை வாரமொன்றில் பாடசாலை ஒன்றிற்கு வருகை தந்த மாணவர்களைக் குறிக்கின்றது. இங்கு ↑ = 20 மாணவர்கள்

| | |
|---|---|
| திங்கள் | ↑↑↑↑↑↑↑↑↑↑↑↑↑↑ |
| செவ்வாய் | ↑↑↑↑↑↑↑↑↑↑↑↑↑ |
| புதன் | ↑↑↑↑↑↑↑↑↑↑ |
| வியாழன் | ↑↑↑↑↑↑↑↑↑↑↑↑ |
| வெள்ளி | ↑↑↑↑↑↑↑↑↑↑↑↑↑ |

இந்தப் படத்தை அவதானித்துச் சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

21. எந்த நாளில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் வருகை தந்தார்கள்? ( .................. )

22. வியாழன் வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? ( .................. )

23. வியாழன் வருகையிலும் எவ்வளவு மாணவர்கள் அதிகமாக திங்கள் வருகை தந்துள்ளார்கள். ( .................. )


24. மாணவர் வருகை மிகக் குறைவான நாள் எது? ( .................. )

25. இவ்வாரத்தில் வருகை தந்த மாணவர் எண்ணிக்கையை எழுதுக. ( .................. )

◆ கீழே தரப்பட்டுள்ள உருக்களில் முதலாவதாகத் தரப்பட்டுள்ள உருவுடன் மிகவும் நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவின் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

26. 
(1) (2) (3) (4) (5)

27. 
(1) (2) (3) (4) (5)

28. 

◆ கீழ்வரும் சொற்கூட்டங்களில் ஒன்று வித்தியாசமானது. வித்தியாசமான சொல்லினைக் குறிக்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக?

29. i) உடும்பு ii) பல்லி iii) புலி iv) ஓணான் (......)

30. i) விமானம் ii) சூரியன் iii) காகம் iv) பட்டம் (......)



◆ வியாபாரி ஒருவர் பொருட்களின் விலையைக் குறிப்பதற்கு இரகசியக் குறியீடாக பின்வருமாறு எழுதி வைத்தார்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ | ற | வு | க் | கு | ப | கை | க | ட | ன் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

இதன் அடிப்படையில் சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

32. சேட் ஒன்றின் விலை றகுன்ன்ன் எனக் குறிப்பிட்டி ருந்தது. எனவே அதன் விலை?
i) 500.00 ii) 350.00 iii) 250.00 iv) 125.00

33. சேலை ஒன்றின் விலை உகுபன்.ன்ன் என குறிக்கப்பட்டிருப்பின் அதன் விலை?
i) 1460.00 ii) 1560.00 iii) 1780.00 iv) 1570.00

34. ரூபா 2709.25 பெறுமதியான பொருள் எவ்வாறு குறிக்கப்பட்டிருக்கும்?
i) றகைன்க.றகு ii) றகைக்க.றகு
iii) றகைன்ட.றகு iv) றகைட.றகு

35. ரூபா 828.12 விலை குறிக்கப்பட்ட பொருளில் பழுது காரணமாக அது ரூபா 800.12 ஆக விற்பனை செய்யப் படவுள்ளது. எனவே மாற்றம் செய்ய வேண்டிய எழுத்தும் புதிதாக சேர்க்கப்பட வேண்டிய எழுத்தும் முறையே
i) றக.டட ii) ன்ன.றக iii) றக.உற iv) றக.ன்ன

40. ரூபா 628.30 பெறுமதியான சேட்டு ஒன்றின் விலை யைக் குறிக்கும் போது பறக.க்ன் என்னும் குறியீடு பயன்படுத்தப்பட்டது. இதில் ஓர் எழுத்து தவறுதலாக எழுதப்பட்டு விட்டது. அவ்வெழுத்து எது?
i) ப ii) க் iii) ன் iv) க

இப்பாடலைக் கவனமாக வாசித்து அதன் கீழ் தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

பாலைப் போல நிலவு வானில்
பவனிவரப் போகுது
கோலக்கடல் அலைக்கை தட்டிக்
குதூகலிக்கப் போகுது
நிலவானும் கன்சிமிட்டி நின்று பார்க்கப் போகுது
மாலை வேளை மலர்ந்து கங்குல்
மங்கை தோன்றப் போகிறாள்.

01. நிலவு என்பதற்கு ஒத்தசொல் தருக?
.....................................................
02. கோலம் என்பதற்கு எதிர்ச்சொல் தருக?
.....................................................

கீழ்வரும் சொற்களில் ஒத்தசொல் தருக.
03. குதூகலம் ..........................................
04. கங்குல் ..........................................
05. கடல் ..........................................
06. வானம் ..........................................
07. மாலை என்பதற்கு எதிர்ச்சொல். ..........................

கீழே தரப்பட்டுள்ள சொற்களை பெயர்ச்சொல், வினைச்சொல் என இனங்கண்டு, அவற்றுக்கெதிரே எழுதுக.
08. நிலவு ..........................................
09. மலர்தல் ..........................................
10. பால் ..........................................

11. போகுது ..........................................
12. கன்சிமிட்டி என்பதைப் பிரித்து எழுதுக.
.................. + ..................

நீர் கற்ற கீழ்வரும் கருத்தைத் தரும் பழமொழிகளை எழுதுக?
13. எதையும் அளவோடு உண்ண வேண்டும்.
.....................................................
14. எல்லோரும் வெளிநாடு நல்லதென்று சொல்லுகிறார்கள்.
.....................................................
15. இளமையிலேதான் கருத்தோடு கற்க வேண்டும்.
.....................................................

கீழ்வரும் சொற்களை அவற்றின் பொருள் விளங்குமாறு வாக்கியம் அமைக்க.
16. அன்னம் : ..........................................
17. அண்ணம் : ..........................................

அரவம் எனும் சொல்லை வெவ்வேறு கருத்தைத் தருமாறு இரு வாக்கியங்களில் அமைக்க.
18. அரவம் : ..........................................
19. அரவம் : ..........................................
20. தேனீர் என்னும் சொல்லை பிரித்து எழுதுக?
.....................................................
21. மாலா பால் பருகினாள் என்பதில் உள்ள பருகினாள் என்பதன் எதிர்மறைச் சொல்லை எழுதுக?
.....................................................
22. அரவம் கேட்டு அரவம் ஓடியது இங்கு அரவம் என்னும் சொல்லின் பொருள்கள் வெவ்வேறானவை. வேறுபட்ட அந்தச் சொற்களினது சரியான கருத்தின் கீழ்க் கோடிடுக?
1. பாம்பு, சத்தம் 2. சத்தம், பாம்பு 3. பாம்பு, பாம்பு

பின்வரும் வாக்கியங்களைச் சேர்த்து எழுதுக.
23. நேற்று மழை பெய்தது. மயில் தோகையை விரித்து ஆடியது.
.....................................................
24. வரன் பாடசாலைக்கு சென்றான். நன்றாக விளையாடி னான்.
.....................................................
25. கமலா விளையாடினாள். மாலா விளையாடினாள்.
.....................................................

கீழே தரப்படும் விவரணத்தை நன்கு வாசித்து விளங்கிக் கொண்டு, விவரணம் விபரிக்கும் பொருளை எழுதுக.

26. நான் பிறந்த இடம் வாழைச்சேனை. வயல்களில் வைக கோலாக இருந்தேன். வைக்கோலை ஒன்று சேர்த்து சறுசிறு துண்டுகளாக வெட்டி பல மருந்து வகைகளையும் என்னோடு சேர்த்து பல மணித்தியாலங்களாக காய்ச்சி கூழ் ஆக்கி னார்கள். பின் பல இயந்திரங்களினூடாக பாயவிட்டு இப்போது நீங்கள் காணும் நிலைக்கு என்னை மாற்றினார்கள். இப்போது என்னை எல்லோரும் விரும்புகிறார்கள்.
.....................................................

# திருநெல்வேலியில் வயோதிபரை இராணுவத்தினரே சுட்டனராம்!

## பொலிஸ் தரப்பு வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

பரமேஸ்வராச் சந்தியில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை முதியவர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான புலன் விசாரணைகளில் – நான்கு இராணுவத்தினரே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதை தான் கண்டதாக பொலிஸார் ஒருவர் சாட்சியமளித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த வெள்ளியன்று, யாழ். பல்கலைக்கழக வாயிலின் முன்பு வயோதிபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக, புலன் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இதன்படி இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம் என இரண்டு பொலிஸாரும், நான்கு இராணுவத்தினரும் சந்தேகிப்படுவதாகவும், இவர்களின் துப்பாக்கிகள் பரிசோதனைக்கு அனுப்பப்பவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட மூன்று பொது மக்களை விசாரித்தபோது, பொலிஸார் துப்பாக்கியைத் தயார் படுத்தியதாகவும், சுட்டதைத் தாம் காணவில்லை எனவும் தெரிவித்திருப்பதாகவும் இந்த விடயம் தொடர்பான விசாரணை இன்று யாழ். நீதிமன்றில் நடைபெறவுள்ளதாகவும் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

# மின் விஸ்தரிப்பு பணிகள் நெடுந்தீவில் ஆரம்பம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின்சார விஸ்தரிப்பு வேலைகள் கடந்தவாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2003 ஆம் ஆண்டுக்கான பின்தங்கிய கிராமங்களுக்கென பகிர்ந் தளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம், பத்து லட்சம் ரூபா இந்தப் பகுதி மின்விநியோகத்துக்கென ஒதுக்கப்பட்டபோதும், பல காரணங்களால் இழுத்தடிக்கப்பட்டுவந்தது.

இரண்டு ஆண்டுகளின் பின்பு கடந்த வாரம் முதல் மின்கம்பங்கள் நாட்டுவதற்கான குழிகள் தோண்டப்பட்டு வருவதுடன், மின்சாரசபை அதிகாரிகள் வந்து நிலைமையை ஆராய்ந்து சென்றமையும் குறிப்பிடத்தக்கது. (113)

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில், எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ''தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி '' எனும் விடயம் தொடர்பாக ஓய்வு பெற்ற அதிபர் சோ.பத்மநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க நடமாடும் சேவை நெடுந்தீவில்

நெடுந்தீவு பிரதேச செயலகப் பகுதிகுட்பட்டவர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கலுக்கான நடமாடும் சேவை, இந்தமாதம் இறுதிப் பகுதியில் நெடுந்தீவில் இடம்பெறவுள்ளது.

இதுதொடர்பான பயிற்சி நெறி கடந்தவாரம் நெடுந்தீவு மகா வித்தியாலய மண்டபத்தில், உதவிஅரசாங்க அதிபர் ம.பற்றிக்டிறஞ்சன் தலைமையில் இடம்பெற்றது. பயிற்சி நெறியை யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.பத்மநாதனும், திணைக்கள ஊழியர்களும் நடத்தினர். இந்தப்பயிற்சி வகுப்பில் சுமார் நூறுபேர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கென நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பெற்ற விண்ணப்பங்களை, உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்குள் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், மோட்டார் சைக்கிளுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் மட்டுமே வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# கடற்தொழில் செய்யும் பெண்களுக்கு வலை பின்னுதல் பயிற்சி நெறி

நெடுந்தீவுப் பகுதியில் உள்ள கடற்தொழில்சார் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு வலை பின்னுதல் தொடர்பான பயிற்சி நெறி ஒன்று பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

கடந்த 4 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரைக்குமான மூன்று தினங்கள் சுமார் 30 யுவதிகளுக்கு நெடுந்தீவு கடற்தொழிலாளர் சங்க வளாகத்தில் வைத்து இந்தப் பயிற்சி வழங்கப்பட்டது.

இதேவேளை – கடற்தொழிலில் ஈடுபடும் இளைஞர்கள் 30 பேருக்கு கடந்த வருடம் வெளியிணைப்பு இயந்திரம் திருத்தல் தொடர்பான பயிற்சிநெறியை இந்த நிறுவனம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# வீடுகளில் பறித்த மணலை திருடிச் செல்லும் விஷமிகள்

அரியாலைப் பகுதியில் வீடுகள் கட்டுவதற்காக மக்கள் கொள்வனவு செய்த மணலை, இரவு வேளைகளில் உழவு இயந்திரங்களில் வரும் விஷமிகள் திருடிச் செல்வதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அரியாலை இராஜேஸ்வரி வீதிச் சந்தி, அரியாலை புவனேஸ் வரி அம்பாள் வீதி மற்றும் ஆசிர்வாதப்பர் வீதி ஆகிய பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்காக வீதியருகே குவிக்கப்பட்டிருந்த மணலையே– இரவுவேளைகளில் உழவு இயந்திரங்களில் வரும் விஷமிகள் எடுத்துச்சென்று, அதனைக் கூடிய ளவு விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

இதனால் இந்தப் பகுதிகளில் அதிகளவு விலையில் மணலைக் கொள்வனவு செய்த மக்கள், இரவு வேளைகளில் அவற்றைப் பாதுகாப்பதற்காக விழிப்புடன் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அரியாலைப் பகுதிகளில் உழவு இயந்திரம் மூலம் சட்ட விரோதமாக மண் கடத்திச் செல்வோரின் தொகை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (55)

# கச்சேரி – நல்லூர் வீதியில் கூடும் இளைஞர்களால் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி – நல்லூர் வீதியில் நாயன்மார் வீதிச் சந்தி அருகில் கூடும் இளைஞர்களின் தொல்லைகளால், அந்த வீதியால் செல்வோரும், அந்தப் பகுதி மக்களும் பெரும் இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பகுதியில் மாலை வேகைளில் கூடும் இளைஞர்கள் சிலர், வீதியால் போக்குவரத்துச் செய்யும் பெண்களுடன் சேஷ்டைகள் புரிவதுடன், மதுபோதையில் கீழ்த்தரமான வார்த்தைகளையும் பிரயோகிக்கின்றனர்.

அத்துடன் வீதியால் போக்குவரத்துச் செய்பவர்களையும் சீண்டி, அவர்களை வீண்சன்டைகளுக்கு இழுக்க முயற்சி செய்கின்றனர். இதனால் அந்தப் பகுதியால் போக்குவரத்துச் செய்பவர்கள், குறிப்பாக பெண்கள் பெரும் அச்சத்துடன் செல்ல வேண்டியுள்ளதாகவும், அத்துடன் அந்தப் பகுதி மக்களும் இடையூறுகளை எதிர்நோக்கி வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்தனர். (55)

# கஷ்டப் பிரதேச பாடசாலை மாணவருக்கு புலமைப் பரிசில் வழங்க நடவடிக்கை

நாட்டில் உள்ள பாடசாலைகளில் இடைநிலைக் கல்வி பயிலும் மாணவர்களில் வறிய மாணவர்கள் மற்றும் கஷ்டப் பிரதேச மாணவர்கள் ஆகியோருக்கு கல்வி அமைச்சின் ஊடாக ஆசிய அபிவிருத்தி வங்கி புலமைப்பரிசில் வழங்கவுள்ளதாகக் கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புலமைப் பரிசில் திட்டத்துக்கு 'சிசுசவிய' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் 2005 ஆம் ஆண்டு 10 ஆம் தரத்தில் கல்வி பயிலும் 4 ஆயிரத்து 800 மாணவர்களும், 13 ஆம் தரத்தில் கல்வி பயிலும் 7 ஆயிரத்து 200 மாணவர்களும் நன்மையடைய உள்ளனர்.

இதன் போது தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் வருடத்தில் 10 மாதங்களுக்கு வழங்கப்படும்.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்துக்கு வருட வருமானம் 24 ஆயிரம் ரூபாவுக்கும் குறைந்த வருமானமுடைய சமூர்த்தி குடும்பங்களைச் சேர்ந்த வேறு எந்தப் புலமைப் பரிசிலும்பெறாத மாணவர்கள் விண்ணப் பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தப் புலமைப் பரிசில் திட்டம் தொடர்பான மேலதிக விபரங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுனாமியில் உயிரிழந்தோருக்கு கொடுப்பனவு

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் வசித்துக் கொண்டு, அலுவல்கள் நிமித்தம் வெளியூர்களுகுச் சென்ற சமயம் சுனாமி அனர்த்தத்தால்பாதிக்கப்பட்டு, உயிரிழந்தவர்களுக்கு மரணச்செலவுக் கொடுப் பனவாக தலா 15 ஆயிரம் ரூபா வீதம் 5 குடும்பங்களுக்கு நல்லூர் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளது. (63)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்

தீவக கல்வி வலயத்துக் குட்பட்ட றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இலங்கை அதிபர் சேவை தரத்தைச் சேர்ந்தவர்களும், ஆசிரியர்களும் 31.03.2005 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை தீவக வலயக் கல்விப் பணிமணைக்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## சங்காபிஷேகம்

உசன் – மிருசுவில் ஸ்ரீ கந்தசாமி கோவில் 1008 கலச அபிஷேக ஸ்கந்த ஹேம பெருவிழா எதிர்வரும் 12 ஆம் 13 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவருக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் உதவி

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பெரிதும் பங்காற்றி வருகிறது.

இந்தவகையில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில்– அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும், சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்து கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளன.


இதன் முதற்கட்டமாக கடந்த மாதம் வடமராட்சிப் பகுதியில் திக்கம், நாகர் கோவில் ஆகிய இடைத்தங்கல் நலன்புரி நிலையங்களிலுள்ள 289 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினர். இதனைத் தொடர்ந்து 2 ஆம் கட்டமாகக் கடந்த வாரம் தும்பளை கிழக்கு, கற்கோவளம் ஆகிய இடைத்தங்கல் நலன்புரி நிலையங்களைச் சேர்ந்த 191 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் பருத்தித்துறை பெண்கள் உயர்தரக் கல்லூரி, ஆண்கள் உயர்தரக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு எதிர்வரும் நாட்களில் இவை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இல்லமெய்வல்லுநர் போட்டி

நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிறபகல் 2.30 மணிக்கு சீக்கிரியாம்பள்ளம் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற வுள்ளது.

வித்தியாலய அதிபர் கெ.அன்ரன் மரியதாஸ் தலைமையில் இட ம்பெறும் இந்த நிகழ்வில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ம.பற்றிக் டிறஞ்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (113)




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தி திட்டப் பிரிவினர் நேற்று கைலாசபதி கலையரங்கில் நடத்திய 'பால்நிலை சமத்துவத்தைப் பேணுவோம்' நிகழ்வில் தவில், நாதஸ்வர பெண் கலைஞர்களின் திறன் வெளிப்பாடும், பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள் நாடகத்தின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம்.

# மறியல் போராட்டங்களை இராணுவம் கொடூரமான முறையில் அடக்கிவருகிறது

## தமிழீழ விளையாட்டுத்துறை அறிக்கை

எமது மக்கள் தமது எதிர்ப்பை, அதிருப்தியை வெளிக்காட்டுவதற்காக மேற்கொள்ளும் ஜனநாயகப் போராட்டங்களைக் கூட படையினரும், பேரினவாதிகளும் இராணுவ ரீதியாக ஒடுக்கும் நடைமுறையே சமாதானத்தின் பெயரால் இன்று நடத்தப்படுகிறது என தமிழீழ விளையாட்டுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

சமாதான முயற்சி தொடர்பான செய்தியுடன் வரும்போதே மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 வீர வேங்கைகள் சதிமுயற்சியால் கொல்லப்பட்டனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் ஏற்பட்ட யுத்த நிறுத்த காலத்திலும் சமாதானத்துக்காக இதுவரை பல போராளிகள் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர்.

எமது மக்களின் கௌரவமான வாழ்வுக்காக, ஆத்திரமூட்டப்பட்ட போதும் பொறுமையைக் கடைப்பிடித்தோம்.

இன்று எமது மக்கள் தமது எதிர்ப்பை, அதிருப்தியை வெளிக்காட்டுவதற்காக மேற்கொள்ளும் ஜனநாயக ரீதியான போராட்டங்களைக்கூட படையினரும், பேரினவாதிகளும் இராணுவ ரீதியாக ஒடுக்கும் நடைமுறையே சமாதானத்தின் பெயரால் இன்று நடத்தப்படுகிறது. உயர் பாதுகாப்பு வலயத்தால் இடம் பெயர்ந்த மக்கள் அகதிமுகாம்களிலும், கடல் வலயத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொழில் இன்றியும் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழலில் குறைந்த பட்சம் வீதிகளிலாவது பாதுகாப்பாகச் சென்றுவரமுடியாதளவு நிலை படையினரின் வாகனங்களால் ஏற்படுத்தப்படுகிறது. மக்களின் உயிர்கள் பற்றிய அவர்களின் அலட்சியப்போக்கு காலம் காலமாகவே தொடர்ந்து வருகிறது.

சிங்களம் மட்டும் அரச கரும மொழியாக்கப்படும் போது, இந்தத் தீவில் இரண்டு நாடுகள் உருவாகும் என சிங்களப் புத்திஜீவிகளே நாடாளுமன்றில் குரல்கொடுத்தபோது, அதனை எதிர்த்து காலிமுகத்திடலில் சத்தியாகிரகம் இருந்த தமிழ்த் தலைவர்களின் தலைகள் உடைக்கப்பட்டன. இதன் தொடராக ஏற்பட்ட 1961 ஆம் ஆண்டு சிங்கள சிறீ எதிர்ப்பு அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்ட சத்தியாக்கிரகிகள் மீது யாழ்ப்பாணம் கச்சேரி முன்பாக இராணுவம் ஏவிவிடப்பட்டது.

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபு இந்தத் தேசத்தை பிரிவினைக்கு இட்டுச் செல்லும் ஆப்பு என ஜே.வி.பியினர் மற்றும் பேரினவாதிகள் கூச்சலிடுகின்றனர். இன்றைக்கு என்பது வருடங்களுக்கு முன்பே 1926 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா இந்த நாட்டுக்கு சமஷ்டி அரசியல் அமைப்பே பொருத்தமானது எனத் தெரிவித்ததோடு, மூன்று சமஷ்டிக் கூட்டமைப்பின் அரசாகவே மத்திய அரசு அமைய வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்த நாட்டில் எந்த சிங்களத் தலைவர்களையும் அறிவுபூர்வமாகச் சிந்திப்பதற்கும், செயலாற்றுவதற்கும் பேரினவாதம் அனுமதித்ததில்லை என்பதே இதுவரை வரலாறாக இருக்கிறது.

ஒரு காலத்தில் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தில் மிகச்சிறப்புடன் இருந்த உதைபந்தாட்டம், மெய்வல்லுநர் செயற்பாடுகள் யுத்தம் காரணமாகவும், இன ஒடுக்கல் காரணமாகவும் தெற்குடன் ஒப்பிடும் போது ஏறக்குறைய 25 வருடங்கள் பின்தள்ளப்பட்டுவிட்டன.

1976 ஆம் ஆண்டு விளையாட்டு அமைச்சின் அகில இலங்கைப் போட்டியில் யாழ். மாவட்டமே உதைபந்தாட்டத்தில் கொழும்பு மாவட்டத்தைத் தோற்கடித்து சம்பியனானது என்பது பலருக்கும் தெரியாமல் இருக்கலாம். இந்த இடைவெளியைக் குறைக்கும் நோக்கமாகவே எமது இளைஞர்களை விளையாட்டின் பால் ஈர்க்கும் நோக்கில் தமிழீழ விளையாட்டுத்துறை உருவாக்கப்பட்டது.

இன்று சர்வதேச அரங்கில் எமது போராட்டத்தின் நியாயத்தன்மை உணரப்பட்டுள்ளது. சமாதானத்துக்கான சிறந்த ஊடகம் விளையாட்டுத்துறையே என்பதை கிரிக்கெட், உதைபந்தாட்ட மெய்வல்லுநர் சங்கங்கள் உணர்ந்துள்ளன என்பதை அவர்களுடைய நடைமுறைகள் மூலம் வெளிப்படுத்தி வருகின்றனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது தாயகத்தின் விளையாட்டுப் பிரிவினருக்கு சிறப்பான செயற்பாடுகளுக்கு உதவ உறுதியளித்துள்ளனர்.

தமிழீழ விளையாட்டுத்துறையின் போட்டிகளில் வடக்கு – கிழக்கைத் தாயகமாகக் கொண்ட அனைத்து இனமக்களின் அணிகளும் தமிழ், சிங்கள, முஸ்லிம் இன வேறுபாடு இன்றி இதுவரை காலமும் கலந்து கொண்டுள்ளன. இது ஒருவகையில் சமாதானத்துக்குரிய நல்ல சமிக்ஞையாக அமைந்திருந்தது.

இப்போது இந்த சுமூகமான சூழலை குழப்புவதில் பேரினவாதிகளும், படைத்தரப்பும் முயன்று வருகின்றனர். சாதாரண சிங்கள மக்களிடையே ஏற்படுகின்ற எமது போராட்டம் தொடர்பான புரிந்துணர்வு பேரினவாதிகளுக்கு அச்சத்தை ஏற் படுத்துகிறது என்பதையே இன்றைய நிலைமை சுட்டிக்காட்டுகிறது.

கடந்த வருடம் வல்வெட்டித்துறையில் உதைபந்தாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களும், படுகொலைகளும் தமிழ் மக்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவதைக் கூட அனுமதிக்க விரும்பாத பேரினவாதப் போக்கையே சுட்டிக்காட்டுகிறது. ஈழத்தமிழ்த் தேசியத்தின் கௌரவமான இருப்பை வெளிப்படுத்துவதற்கு விளையாட்டையும் சிறப்பான ஊடகமாகப் பயன்படுத்த அனைவரும் உழைப்போம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி–வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, வித்தியாலய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை மாலை 2 மணிக்கு வித்தியாலய அதிபர் சி.சந்திரராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆங்கிலபாட கல்விப் பணிப்பாளர் தனராஜ், சிறப்பு விருந்தினராக வட்டக்கச்சி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சுடர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை தமிழ்ப்பாட ஆலோசகர் கணேசலிங்கம், வித்தியாலய அதிபர் சந்திரராசா ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை வட்டக்கச்சி பிரதேச அரசியற் துறைப் பொறுப்பாளர் சுடர் ஏற்றிவைத்தார். வித்தியாலயக் கொடியை வித்தியாலய அதிபர் ஏற்றிவைத்தார். இல்லங்களுக்கான கொடியை இல்லப் பொறுப்பாசிரியர்கள் ஏற்றிவைத்தனர். (9)

## கடல் நீர் உட்புகுந்தமையால் 1780 ஏக்கர் விளைநிலம் பாதிப்பு

முல்லைத்தீவு பிரதேசத்தில் சுனாமி கடற் கொந்தளிப்பால் கடல் நீர் உட்புகுந்து ஆயிரத்து 780 ஏக்கர் விளை நிலங்களைப் பாதிப்படையச் செய்துள்ளது என, முல்லைத் தீவு மாவட்ட விவசாயப்பணிப்பாளர் குக தாஸன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தக் கடல் கொந்தளிப்பால் விளைச்சல்களை அறுவடை செய்யும் நேரத்தில் தாக்கப்பட்டு சேதத்துக்குள்ளாகியதுடன், விவசாயிகளின் விவசாய உற்பத்திக்கான மூலப் பொருட்கள் அனைத்தையும் கடல் நீர் அடித்துச் சென்று விட்டது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு, தமது தொழிலைத் தொடர முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் நிலத்தடி நீரும் உவர் நீராக மாறியுள்ளது.

இது தொடர்பான தகவல்கள் விவசாயத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எனவே அவர்கள் இது தொடர்பான ஆய்வை வெகுவிரைவில் மேற்கொண்டு இதற்கான தீர்வை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## திறக்கப்படாத நிலையில் ஆரம்ப சுகாதார நிலையம்

பூநகரி–கௌதாரிமுனை ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு திறக்கப்படாதநிலையில் காணப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தால் கௌதாரிமுனை, விநாகயோடை, கல்முனை, வெட்டுக்காடு போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் 10 கிலோமீற்றர் தூரம் சென்றே மருத்துவ வசதிகளைப் பெறவேண்டிய நிலை காணப்படுகிறது. இதனால் இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கவேண்டியுள்ளது.

## தளபாடம் அன்பளிப்பு

முல்லைத்தீவில் சுனாமி கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு, உண்ணாப்புலவு இடைத்தங்கல் முகாமில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ள சிறார்களுக்காக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் திறந்துவைக்கப்பட்டுள்ள இரு முன்பள்ளிகளுக்குத் தேவையான கதிரை, அலுமாரி மற்றும் சிறார்களுக்கான பாடசாலைப் பைகள், கற்றல் உபகரணங்கள் என்பவற்றை வேல்ட் விஷன் நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர்.

## மொழிபெயர்ப்பு

கிளிநொச்சி மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் வருடாந்தம் வழங்கப்படும் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரப் புதுப்பித்தல் விண்ணப்பப்படிவம் தற்போது தனித் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்படுகிறது.

இதுவரை காலமும் இந்தத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கும் படிவம் ஆங்கில மொழியிலேயே வழங்கப்பட்டது.

தற்போது தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இத்தகைய படிவங்களால் தமிழ் பேசும் மோட்டார் வாகன உரிமையாளர்கள் திருப்தியடைந்துள்ளனர்.

## குடிநீருக்கு தட்டுப்பாடு

மன்னார் இலுப்பைக் கடவைப் பிரதேச மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்துக்குட்பட்ட அந்தோனியார்புரம் படகுத்துறை இலுப்பைக்கடவை ஆகிய கிராம மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதாயின் சுமார் 2 கிலோமீற்றர் சென்றே பெறவேண்டியுள்ளது.

இங்கு நீர்த்தாக்கி மூலம் வழங்கப்பட்டு வந்த குடிநீர் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக நிறுத்தப்பட்டுள்ளது.

## நேர்முகப் பரீட்சை

வவுனியா – தேசிய கல்வியியற் கல்லூரியில் 2004 ஆம் ஆண்டு கற்கை நெறியில் கற்று வெளியேறிய மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் திருகோணமலை கல்வி அமைச்சு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள், கல்லூரி வளாகத்தில் அனுமதி அட்டைகளைப் பெற்று, நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

## கலந்துரையாடல்

வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள சுதேச அக்குபஞ்சர் ஹோமியோபதி வைத்தியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

தமிழீழ சுகதார சேவையினரால் நடத்தப்படும் இந்தக் கலந்துரையாடல் தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி விக்கிரமன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 10 மணியளவில் கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெறும் எனத் தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர்.

## விடுதலைப்போருக்கு எழுத்துகளால் வீரியமூட்டியவர் சிவராசா!

### இறுதி நிகழ்வில் பொன். தியாகம் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் போராட்டம் பல கோணங்களையும், கோலங்களையும் கொண்டு இருக்கிறது. வாலிபர்கள், வயோதிபர்கள் எதிரியை எதிர்த்துப் போராடுகிறார்கள். இது ஒரு கோணமாகும். இந்த விடுதலைப் போராட்டத்தை வீறு கொண்டு நடத்துவதற்கு பல வகையான விதங்களிலே எமது மக்கள் செயற்பட்டு வந்திருக்கின்றனர். அதில் ஒரு வகையான செயற்பாடு தான் எழுத்தாளர்களினது செயற்பாடாகும் என, தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சுகவீனம் காரணமாக உயிரிழந்த நாட்டுப்பற்றாளர் கணபதிப்பிள்ளை சிவராசாவின் இறுதி வணக்க நிகழ்வு நேற்று முன்தினம் பரந்தன் இந்து வித்தியாலயத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு வீர வணக்கவுரையை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது –

இந்தப் போராட்டத்தை ஊக்குவிப்பதற்கும், செயற்படுவதற்கும் உரிய தன்னுடைய கலைப்பணியைத் தொடர்ந்து ஆற்றி வந்தவர் நாட்டுப்பற்றாளர் சிவராசா. அவர் துணையாக எழுந்த விடுதலைப் போராட்டம் வெற்றிப்பாதையை எட்டியிருக்கிறது. இவர் எம்மோடு இணைந்து எமது போராட்டத்துக்கு எழுத்தாற்றல்களாலும், தன்னுடைய கலைத்துறையினாலும், நடிப்புத்திறனாலும் வழிகாட்டியவர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மார்ச் –09

1851 : மின்விசையும், காந்தவிசையும் தனித்தனியான விசைகள் என்ற விஞ்ஞானி கூலம்ப் உடைய கருத்தை பிழை என நிரூபித்து, மின்காந்தத்தைப் பற்றி கண்டு பிடித்துக் கூறிய டென்மார்க் விஞ்ஞானியான ஹான்ஸ் கிறிஸ்டியன் ஒர்ஸ்டெ மரணமடைந்தார்.

1876 : எடின்பேர்க் என்ற இடத்தைச் சேர்ந்த அலெக்சான்டர்கிரகம் பெல் தொலைபேசி செய்வதற்கான காப்புரிமையைப் பெற்றார்.

1918 : ரஷ்ய – ரூமேனியா சமாதான உடன் படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

1935 : வெர் ஸெயில்லஸ் உடன்படிக்கையை மீறி ஜேர்மனி இரகசியமாக போர்த்தளபாடங்களைப் பெருக்கும் நடவடிக்கையை ஆரம்பித்து.

1936 : அமெரிக்காவில் வங்கிகள் அனைத்தும் மூடப்பட்டன.

* : ஜப்பானின் புதிய பிரதமரான கோக்கி ஹிரோட்டோ தனது அமைச்சரவையை மாற்றி அமைத்ததுடன், கனரகத் தொழிலின் வளர்ச்சியே அரசின் முக்கிய குறிக்கோள் என்றும் அறிவித்தார்.

1942 : ஜாவா தீவில் இருந்த டச்சுத் தளபதி தனது 100 ஆயிரம் படையினருடன் சரணடைந்ததைத் தொடர்ந்து, ஜப்பான் அதனைக் கைப்பற்றியது.

1945 : ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய நகர் மீது நடந்த கொடிய குண்டு வீச்சை விட மிக மோசமான குண்டு வீச்சு டோக்கியோ நகர் மீது நடத்தப்பட்டது. பறக்கும்கோட்டைகள் என்றழைக்கப்படும் மிகப்பெரிய குண்டு வீச்சு விமானங்கள் வானிலேயே வெடித்துச் சிதறி தீ கக்கும் குண்டுகளைத் தொன் கணக்குகளில் மழைபோல் பொழிந்தன. இந்தத்தாக்குதலில் ரோக்கியோ நகர் எங்கும் தீ பரவி 120 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கருகி மாண்டனர்.

1956 : சைப்பிரசில் ஆயர் மார்க்காரியோஸ் பயங்கரவாதி என முத்திரை குத்தப்பட்டு, பிரிட்டிஷ் படைகளால் கைது செய்யப்பட்டு, இந்து சமுத்திரத்திலுள்ள [illegible]செல்ஸ் தீவுக்கு நாடுகடத்தப்பட்டார்.

1965 : தொலைபேசி மூலம் பங்குவியாபாரம் பற்றிய விபரம் கேட்பவர்களுக்கு பதிலளிக்கக் கூடியதான பேசும் கணினி நியூயோர்க் பங்குச் சந்தையில் தொழிற்படத் தொடங்கியது.

தொகுப்பு – சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

*சிந்தனைக்கு*

*புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாம் கிழமை தரும்.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## உண்மையின் உஷ்ணம் தாளாது உளறல் அறிக்கை விடும் ஜே.வி.பி

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் உத்தியோகபூர்வமற்ற அரசு ஒன்று இருப்பதாக உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் அவர்கள் ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு தெரிவித்துள்ள கருத்தானது - சிங்கள பேரினவாதிகளின் அண்மைக்கால ரட்சகர்களாக தம்மைத்தாமே பிரகடனம் செய்துவரும் ஜே.வி.பியினருக்கு பெரும் சினத்தையும் சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளமையானது வியப்பினை ஏற்படுத்தும் செயலேயல்ல.

அது மட்டுமல்ல, உலகவங்கியானது சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பகுதிகளின் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுவதற்கென 600கோடி ரூபாய்களை வழங்கப் போவதாக அறிவித்துள்ளமையும், அவர்களுக்கு மேலும் கடுப்பை உண்டுபண்ணியிருப்பதாகவும் அவர்களிடமிருந்து வெளியான காட்டமான எதிர்ப்பு அறிக்கை மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

இது விடுதலைப்புலிகளை அங்கீகரிப்பதாகவும், அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியை ஒரு அரச நிர்வாகமாக உலகவங்கி ஏற்றுக்கொள்வதாகவும் கருத்துப்படுகிற தாம்.

இதனை அவர் வாபஸ் பெறவேண்டுமாம்... இல்லாவிடில் அவரை இலங்கையில் இருந்து வெளியேற்றவும் வேண்டுமாம்.

ஏற்கனவே விடுதலைப்புலிகளுக்கு சார்பாக இயங்குவதாக சமாதான முயற்சிகள் தொடங்கிய காலத்திலிருந்தே குற்றம் சாட்டி - கண்டித்து, விமர்சித்து நோர்வேயின் சமாதான அனுசரணையாளர்களை நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென்று அர்த்தமற்ற முறையில் கூச்சலிட்டதுடன், ஜனாதிபதியின் கட்சியுடன் உடன்பாடொன்றை தேர்தல் காலத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டபோது, ஜனாதிபதியைக் கொண்டே நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை சமாதான ஏற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து மீள அழைத்துக்கொள்ளுமாறு நோர்வே அரசுக்கு நெருக்கடி கொடுத்தவர்கள் இந்த ஜே.வி.பி பேரினவாதிகள் தான்!

ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்று நோர்வே சொல்ஹெய்மை மீளப்பெற்றுக் கொண்டு அமைதிகாத்த போதும், பின்னர் அதேஜனாதிபதியைக் கொண்டே அதே சொல்ஹெய்மை மீளவும் சமாதான முன்னெடுப்புகளைத் தொடர வரவேற்க வைத்தபோது, ஜே.வி.பியினரின் நோர்வே எதிர்ப்பு, சமாதான எதிர்ப்பு கோஷத்திற்கு விழுந்தது நெத்தியடியே தான்!

அவர் இன்றும் தனது சமாதான அனுசரணைப் பணியை தொடர்பவராகவே உள்ளார்.

ஜே.வி.பி அவமானத்தால் தலைகுனிய வேண்டிய விடயம் இதுவாகும். இப்போது உலகவங்கியின் வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் மீது அதே அஸ்திரத்தைப் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளனர்.

சர்வதேச பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்ட விடுதலைப்புலிகளுடன் அபிவிருத்தி குறித்தோ, நிதி விவகாரங்கள் குறித்தோ உலக வங்கி உள்ளிட்ட எந்த சர்வதேச அமைப்போ, நாடோ பேசக்கூடாதாம் - இதுவும் ஜே.வி.பியின் சீற்றம்தான்.

இதே ஜே.வி.பி அங்கம் வகிக்கும் ஐ.ம.சு முன்னணி அரசே, விடுதலைப்புலிகளை தடைசெய்யவில்லை, அவர்களோடு பேசுவதற்கென நோர்வே அரசு மூலமாக முயற்சி செய்கிறது, சுனாமி நிவாரண, மீள்கட்டுமானப்பணிகளை மேற்கொள்ள பொதுக்கட்டமைப்பொன்றை புலிகளுடன் இணைந்து உருவாக்க முயற்சிப்பதாக அறிவித்துள்ளது.

இந்த நிலையில் ஜே.வி.பியினரின் சீற்றத்திற்கு ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்றால் இல்லையென்றே கூறலாம்.

அப்படியானால் தாம் அங்கம் வகிக்கும் அரசிலிருந்து உடனடியாக வெளியேறி, ஜனாதிபதியையும் அரசையுமல்லவா அவர்கள் எதிர்க்கவேண்டும்? அதற்கான துணிச்சலோ, விருப்போ ஜே.வி.பிக்குக் கிடையாது.

அரசைவிட்டு வெளியேறினால் ஆட்சி அதிகாரப் பதவிச் சொகுசு பறந்துவிடுமே....!

1971 முதல் வாய்ச்சவடால் அடித்தே மக்களை ஏமாற்றிய கோழைகள் இவர்கள் என்பதை இந்திய விஸ்தரிப்பு வாதம் பற்றியும், அமெரிக்க ஏகாதிபத்தியம் பற்றியும் வாய்கிழியப் பேசிவிட்டு, இப்போது அந்த இரு தரப்பினரிடமும் சரணாகதியடைந்ததிலிருந்தே புரிந்து கொள்ள முடியும்.

இது ஒருபுறமிருக்க ஜே.வி.பியினருக்கு ஜால்ரா போடும் வகையில் அரசின் புழுகுப் பிரசாரகரான - வெளியுறவு அமைச்சர் கதிர்காமரும், உலகவங்கி பிரதிநிதிமீது அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று அறிக்கை விட்டுள்ளார்.

பீற்றர் ஹரோல்ட் சொல்வது போல் விடுதலைப்புலிகளிடம் சென்று பேச சகலவசதிகளையும் செய்துகொடுத்து எத்தனையோ வெளிநாட்டு முக்கியஸ்தர்களை, அதிகாரிகளை, பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளை அனுப்பி வைக்கும் பணியை இதே அரசுதான் செய்து வருகிறது.


அப்படிச் செய்துவிட்டு அவர்கள் புலிகளுடன் பேசி, நிலைமைகளை நேரில் பார்த்து அறிந்த பின்பு சொல்லும் உண்மைகளுக்கு செவிசாய்க்க முடியாது துள்ளுவது வெறும் பலவீனமான செயற்பாடேயாகும்.

"உண்மை சுடும்" என்பதும் உண்மைதான்.

ஜே.வி.பி, பொய்மையாளர்களுக்கு, போலி புரட்சிவாதிகளுக்கு உண்மையை தாங்கிக்கொள்ளும், ஏற்றுக்கொள்ளும் மனோதர்மம் கிடையவேகிடையாது. எனவே உண்மையின் உஷ்ணம் தாங்காமல் கத்துகிறார்கள்..

நன்றாகக் கத்தட்டும்...! அதற்கு நாமென்ன செய்ய முடியும்?

# நாடும் நடப்பும்




## செய்தியாளர்கள் தாக்கப்பட்டதற்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்!

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது, செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

லேக்கவுஸ், தினக்குரல் ஆகிய பத்திரிகைகளின் ஊடகவியலாளர்கள், படையினரால் தாக்கப்பட்டதோடு, அவர்களின் மோட்டார் சைக்கிளும் சேதமாக்கப்பட்டமை சம்பந்தமாக சுதந்திர ஊடக இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மக்கள் எதிர்ப்பை நசுக்குவதற்காக ஆயுதப்படையினர் தலையிட்டு, இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்கச் செல்லும் போது உத்தியோகபூர்வ அடையாள அட்டை அணிந்திருக்க வேண்டும். இவர்களை இனங்கண்டு பாதுகாப்புப் பிரிவினர் விசேட கவனம் செலுத்தி, அவர்களது கடமைகளைச் சுதந்திரமாகச் செய்யும் சூழ்நிலையை உருவாக்கவேண்டும்.

இதற்கு முன்பும் பல தடவை இவ்வாறான நிகழ்வுகள் வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெற்றுள்ளன.

இது போன்ற நடவடிக்கைகள் எதிர்காலத்தில் இடம் பெறாது இருப்பதற்கு பாதுகாப்புப் பிரிவினரும் மற்றும் அமைப்பினரும் ஊடகவியலாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

## வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட அதிவேக அம்புலன்ஸ் படகை கடற்படையினர் பொறுப்பேற்பு!

கிண்ணியா வைத்தியசாலைக்கு சுனாமி நிவாரணத் திட்டத்தின் கீழ், இத்தாலி அரசால் வழங்கப்பட்ட அதிவேக அம்புலன்ஸ் படகு கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

புலிகளின் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறியே கடற்படையினர் இந்தப்படகை தமது பாவனைக்குப் பயன்படுத்திக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

75 குதிரைச்சக்தி வேகத்தில் பயணிக்கக் கூடிய இந்த அம்புலன்ஸ் படகு தற்பொழுது திருகோணமலைத் துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக தற்போது 15 குதிரைச்சக்தி வேகம் கொண்ட படகுகளே பாவனையில் இருப்பதாகவும் சக்தி கூடிய இந்தப்படகு புலிகளின் கரங்களுக்குச் சென்றால் துறைமுகத் தின் பாதுகாப்புக்குப் பெரும் பிரச்சினையாக இருக்குமென்று கடற்படை தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தப் படகை சுனாமியால் இடம் பெயர்ந்தவர்களுக்கான சிகிச்சை வழங்குவதற்கு கிண்ணியா வைத்திய சாலைக்கு வழங்குவது என்ற போர்வையில் புலிகள் இயக்கத் துக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாகவும் படைத்தரப்புத் தெரிவித்துள்ளது. (தே)

## கடற்படை, இலங்கை மீனவருடன் இந்திய மீனவர் கூட்டமைப்பு ஒப்பந்தம் செய்ய முயற்சி!

(கொழும்பு)

வடபகுதி மீனவர்கள் மற்றும் கடற்படையினருடன் கலந்துரையாடி, தமிழ் நாட்டு மீனவர்களுக்கும் வடபகுதி மீனவர்களுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடுவதற்காக தமிழ்நாடு ஐக்கிய கடற்தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்குத் தேவையான அடிப்படையான விடயங்கள் பற்றி கலந்துரையாடுவதற்கு தமிழ்நாடு ஐக்கிய கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் சி.நாகேஸ்வரன் தற்போது இலங்கை வந்துள்ளார்.

இந்திய மீனவர்களுக்கும் வடபகுதி மீனவர்களுக்கும் இடையில் அடிக்கடி தோன்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது, இந்திய மீனவர்கள் இலங்கை கடற் படையினரால் கைது செய்யப்படுவதைத் தடுப்பது என் பன இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான நோக்கம் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதால் அவர்களின் குடும்பம் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்படுவதாகவும் இது தொடர்பாக படைத்தரப்பினருடனும் கலந்துரையாட இருப்பதாகவும் இந்திய கடற்தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## வேலணை பிரதேச சபைக்கு புதிய கட்டடங்கள் அமைப்பு

(வேலணை)

கடந்தகால யுத்தத்தினால் முற்றாகச் சேதமடைந்து, புனரமைக்க முடியாமலிருந்த வேலணை பிரதேச சபைக்குப் புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

சுமார் ஒரு கோடி ரூபா நிதிப் பயன்பாட்டில் வேலணை வங்களாவடிச் சந்தியில் வேலணைப் பிரதேச சபைக்கான கட்டடங்கள் கட்டப்பட்டுவருகின்றன.

யுத்தத்தின் பின்னான வேலணைப் பிரதேச சபையின் செயற்பாடுகள் யாவும் வாடகைக்குரிய தற்காலிக கட்டடங்களிலேயே இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வாசகர் நோக்கு

## பொறுப்பற்றவர்கள் செயலும், போக்குவரத்து அவலமும்

ஏ-9 பாதை போக்குவரத்து தடைப்பட்டிருப்பதால், கோப்பாய் ஊடாக செல்லும் மானிப்பாய் வீதி போக்குவரத்து நெரிசலாக இருப்பதால் சைக்கிள்களில் பிரயாணம் செய்வோர் பெரும் அவலத்துக்குள்ளாகி வருகின்றனர்.

சில நாட்களாக இந்த வீதியில் தொடர்ச்சியாக, கோப்பாய் பாலத்திற்கு மேற்குப் புறமாக, அதாவது மயானத்தின் நுழைவாயிற் பகுதியை அண்டிய இருமருங்கிலும், பொறுப்பற்ற சிலர் இரவு நேரங்களில் கழிவுப் பொருட்களாகிய கல், உடைந்த போத்தல்கள், கண்ணாடித் துண்டுகள், தகரங்கள், பழைய கம்பிகள், வீட்டிலுள்ள கழிவுப் பொருட்களை சாக்கு மற்றும் உரப்பைகளில் வீதியோரங்களில் கொட்டி விட்டுச் செல்கின்றனர்.

சிகை அலங்கரிப்பு நிலையங்களில் இருந்து அப்புறப்படுத்தப்படும் கழிவுகளும், இந்தக் கரைகளில் மூடை மூடையாக சிதைந்த நிலையில் கிடக்கின்றன. இதனால் காற்றுக் காலங்களில் இந்த வழியாகப் போக்குவரத்துச் செய்வோர் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

அதுமட்டுல்ல. கொல்களங்களில் இருந்து கொண்டுவரும் கால் நடைகளின் எச்சங்களை, உட்பகுதியில் எவ்வளவோ இடமிருந்தும் வெட்டிப் புதைக்காது வெளியில் வீசிவிட்டுச் செல்வதால், அவற்றைக் கட்டாக்காலி நாய்கள் வீதிகளுக்கு இழுத்துவந்து விடுவதுடன், வீதிகள் அசுத்தமடைந்து, துர்நாற்றமும் வீசுகின்றது. ஆதலால் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இந்தப் பகுதிக்குப் பொறுப்பான சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி தென்மராட்சியில் பிரசித்திபெற்ற மட்டுவில் கண்ணகை அம்மன் ஆலய உற்சவம் ஆரம்பமாகவுள்ளது. அப்போது இந்தத் தினங்களில் வாகன நெரிசலும், போக்குவரத்து இடையூறுகளும், ஏற்பட இது இட மளிக்குமாதலால், பொறுப்பான அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா?

சைக்கிள்களில் செல்வோர் வாகன நெரிசல் ஏற்படுமிடத்தில், ஒதுங்கி நிற்பதற்கோ, விலகி நிற்பதற்கோ முடியாத நிலையில் உள்ளனர்.

புத்தூர். சண்முகம்.

அரசியர் கட்டுரை

சிலம்பு



# அரசியல் சூறாவளிக்குள் சிக்கியுள்ள சுனாமி அலைகள்!

இலங்கைத் தீவில் தேசிய ஊடகங்கள், தேசியச் செய்தித்




தாள்கள் என்பவற்றுக்குத் 'தேசிய' என்பதன் பொருள் 'சிங்களம்' என்று தான தெரியும். தமிழினம் வெறுமனே ஒரு சிறுபான்மைச் சமூகம் என்று தான் அவை கருதுகின்றன. தமிழ் மக்களின் பிரச்சினையை தேசிய இனத்தின் பிரச்சினையாக என்றுமே அந்த ஊடகங்கள் கருதியதில்லை. அது மாத்திரமல்ல ,இன முரண்பாடு களை அன்று தொட்டு வளர்த்து வருவதிலும் அவை பாரிய பங்காற்றி யுள்ளன; பங்காற்றி வருகின்றன.

சிறு சலுகைகளைக் கூடத் தமிழ் மக்களுக்கு வழங்கக் கூடா தென்பதில் இறுக்கமான நிலைப் பாட்டை எடுத்துச் சிங்கள மக்க ளைத் தூண்டி விட்டதில் பெரும் பங்கு வதித்தது செய்தித்தாள் ஊட கங்களேயாகும். பண்டா - செல்வா உடன்படிக்கைக்கு எதிராகப் பாரிய பரப்புரையை மேற்கொண்டு, அதைக் கிழித்தெறிய வைத்ததில் ஏரிக்க ரைச் செய்தித்தாள்களே பெரும் பங்கை வகித்தன. மாவட்டசபை களை வழங்கக் கூடாதென எழுதிக் குவித்து அதனைத் தடைசெய்தது அனைத்துச் செய்தித்தாள்களுமே. மாவட்டசபை வெள்ளை அறிக்கை நாடாளுமன்றத்தில் கொண்டு வரப் பட்ட பொழுது, தமிழ் மக்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்படு வதாகச் சிங்கள மக்களைத் தூண்டி விட்டதும் இந்த வகை ஊடகங் களே ஆகும். இதில் பெரும்பங்கு வகித்தது எம்.டி குணசேனா நிறு வனத்தின் 'தவச' குழுச் செய்தித் தாள்களேயாகும்.

இவ்வாறு அன்று தொடங்கிய இவர்களது இத்தகைய செயல்கள் ஓய்ந்து விடாது, இன்றும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

உலக நாடுகள் இனப்பிரச்சி னைத் தீர்வில் அக்கறை கொண் டுள்ளதைச் ஜீரணிக்க முடியாமல், தமிழர் தரப்பு நியாயங்களை மழுங் கடிக்கவும், தமிழர் தரப்புப் போராட் டத்தைப் பயங்கரவாதம் என்று கூறிச் சிங்கள அரசுக்கு உதவி வரு கின்றன. ஆனால் இவற்றின் மூடி மறைப்புக்களைச் சுக்குநூறாக்கித் தமிழ் மக்களின் தேசியப் போராட் டம் உலக அரங்கில் மேலேழுந்து நிற்கிறது.

இந்த நேரத்தில் சுனாமி கடற் கொந்தளிப்பு தென்கிழக்காசியா வில் பாரிய அழிவைத் தந்துள்ளது. இந்த அழிவு இலங்கைத் தீவிலும்



பாரிய இழப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் பேசும்மக்கள், சிங்கள மக் கள் என்று வேற்றுமை காட்டாது, சுனாமிப் பேரழிவைக் கொடுத்துச் சென்றுள்ளது. அழிவைக் கொடுத் தது சுனாமி என்றால், அந்த அழி வால் ஏற்பட்ட தாக்கம் அரசியல் சகதிக்குள் சிக்கித் தடுமாறுகிறது. சுனாமிக்கு இனவேறுபாடு கிடை யாது என்று கூறும் தென்னிலங் கைத் தலைமை புனர்நிர்மாண, கட்டுமானப் பங்களிப்பின் இனவேறு பாட்டைக் காட்டுகிறது. உதட்டள வில் இனவேறுபாடு கிடையாது என்று உலகத்துக்குச் சொல்லி ஏமாற்றுகிறது. ஆனால் செயலளவில் இன வேறுபாட்டையே காட்டுகிறது.

உலக நாடுகளிடம் உதவி கேட்பதற்காக இனபேதங்களற்ற முறையில் புனரமைப்பு நடைபெறும் என்று கூறிவருகிறது. ஆனால் தமிழ் மக்களது பகுதிகளில் வேலைத் திட்டங்கள் எதுவும் உருப்படியாக மேற்கொள்ளப்படவில்லை. தமிழர் தாயகப் பகுதிகளில் மட்டும்தான் இந்த நிலைமை என்றில்லை. சிங்கள நாட்டில் கூட நிவாரணப் பகிர்வில், கட்டுமானப் பணிகளில் இஸ்லாமியத் தமிழ் மக்கள் ஓரங் கட்டப்படுகின்றனர். அந்த மக்கள் பரி தாபகரமான நிலைக்கு உள்ளாக் கப்பட்டுள்ளனர்.

ஆனால் சிங்கள அரசு அபிவிருத் திப் பணிகளை விரைவாகத் தென் பகுதிகளில் மேற்கொண்டு வருகி றது. அரசின் இந்த நடைமுறை களை உதவி வழங்கும் நாடுகள் தற்பொழுது கண்டு கொள்ளத் தலைப்பட்டுள்ளன. அதனால் விடுத லைப்புலிகளை உள்ளடக்கிய பொதுக் கட்டமைப்பு ஒன்றை ஏற் படுத்தி, தமிழர் தாயகப் பகுதிக ளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்றுஅந்த நாடுகள் கூறுகின்றன. பொதுக்கட்ட மைப்பு ஏற்படுத்தப்படும் என்று கூறிக் கொண்டு உருப்படியான திட்டங்கள் எதுவும் இல்லாமல் காலத்தை இழுத்தடிப்பதிலேயே அரசு நாட்டங் கொண்டுள்ளது. இவ் வாறு காலத்தை இழுத்தடிப்பது டன், தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற் கொண்டு வரும் பணிகளுக்குக் களங் கம் கற்பிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தின் அர்ப்பணிப்பையும், செயற்திற னையும் பல வெளிநாட்டு அரசுகள் வியந்து பாராட்டுகின்றன. உலகத் தின் முன்னணிச் செய்தி ஊடகங் கள், செய்தித்தாள்கள் தமிழர் புனர் வாழ்வுக் கழகப் பணிகளைப் பாராட்டு கின்றன. ஆனால் சிங்கள ஊடகங் கள் பயங்கரவாத நடவடிக்கைக்ளுக் குரிய தளபாடங்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுனாமி நிவா ரணப் பொருள்களுடன் கடத்தி வருவதாகக் கூறி, தூயபணியைக் களங்கப்படுத்தி வருகின்றன. வெளி நாடுகள் சில - அரசு மீது நம் பிக்கை கொள்ளாமல், தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினூடாக உதவி களை மேற்கொள்ளவுள்ள நிலை யில் அவதூறு கூறித் தடுப்பதே சிங்களத்தின் நிலைப்பாடாகும்.

இதேநேரம் பொதுக்கட்டமைப்பு ஏற்படுவதில் அரசு காட்டும் தாமதத் தையும், வேண்டாத கருத்துக்களை யும் மூடி மறைத்துக் கொண்டு, விடு தலைப் புலிகள் விட்டுக் கொடுப்பை மேற்கொள்ள வேண்டும் என்று கூறி வருகின்றன. சில ஊடகங்கள் இனப் பிரச்சினை பற்றிப் பேசும் பொழு தும், தமிழர் தரப்பே விட்டுக்கொடுக்க வேண்டும் என்று கூறி வருபவர்கள், இடைக்காலத் தன்னாட்சி அலகு பற்றிப் பேசும் பொழுதும் விடுத லைப் புலிகள் விட்டுக் கொடுப்பு டன் நடக்கவேண்டும் என்று கூறுப வர்கள் - சுனாமி அழிவிலிருந்து மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கை களிலும் - பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகவும் தமிழர் தரப்பு விட் டுக் கொடுக்கவேண்டும் என்று கூறு கின்றனர்.

*(தொடரும்...)*

பகுதி 56

சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...

இது தொடர்பாக நாம் மேலும் ஆராய்ந்ததில், ஒரு விகாரையில் இந்தச் சாமான்கள் இறக்கப்பட் டமை உறுதியாயிற்று. பின்னர் அதேபிக்கு சிலரையும் அழைத்துக் கொண்டு முகாம்களில் இவற்றை விநியோகம் செய்தார். இவ்வாறு விநியோகம் செய்ததை நானே ஒரு முகாமில் நேரடியாகக் கண்டேன்.

அடுத்தநாள் கச்சேரியில் நடை பெற்ற கூட்டத்தில் இந்தச் சம்ப வங்களைக் குறிப்பிட்ட நான் இப் படியாக இதில் நீங்கள் அரசியல் செய்யக் கூடாது. வரும் நிவாரணப் பொருட்களை நேரடியாக மக்க ளுக்கு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையேல் கச் சேரிக்கு வந்து கச்சேரிக்குள்ளால் ஒழுங்குபடுத்தி வழங்க வேண்டும் என வலியுறுத்தினேன். இதற்கு அரச அதிபர் 'புத்தபிக்கு தான் சேகரித்த பொருட்களை கச்சேரிக் குக் கொண்டு வந்து பதிந்தார். அதன பின்னர் அங்கிருந்து கொண்டு செல்லும் போதே நீங்கள் அத னைக் கண்டுள்ளீர்கள்' என சமா தானம் சொன்னார்.

அதற்கு நான் 'மஸ்கேலியாவி லிருந்து 15 லொறி சாமான்கள் வந்தன. இவற்றைக் கொண்டு வந்தவர்கள் தாமே அதனை விநி யோகிக்கத் தடை விதிக்கப்பட்டது. அந்தச் சாமான்கள் கச்சேரியி லேயே இறக்கப்பட்டன. அந்தச் சமயம் நாம், அந்த மக்கள் தமது உழைப்பின் ஒரு நாள் சம்பளத் திலிருந்து சேகரித்த பணத்தில் வாங்கப்பட்ட சாமான்கள் இவை. இவற்றை தமது உடன் பிறப்புக ளான தமிழருக்குக் கொடுக்க விரும்புகிறார்கள். எனவே, அவர் களை நேரடியாகக் கொடுக்க விடுங் கள் எனக் கேட்டோம். ஆனாலும் அதற்கு அரச நிர்வாகமும், படையி னரும் மறுத்ததுடன், வேறு பகுதி களுக்கு அந்தச் சாமான்கள் அனுப்பப்பட்டன. அவ்வாறிருக்கை யில் - இப்போது புத்தபிக்கு நேர டியாகச் சேகரித்த பொருட்களை பதிந்து விட்டு கொண்டு செல்கிறார் என்று சொல்கிறீர்களே?' என்று கேடடேன். அத்துடன் இனி இவ்வாறு நடந்து கொள்ளாதீர்கள் என வலி யுறுத்தினேன்.

தற்போது எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நாம் ஒரு நடைமுறை யைக் கொண்டு வந்துள்ளோம். இங்குள்ள உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள், ஏற்கெனவே இங்கு பணியாற்றிக் கொண்டிருந்த நிறு வனங்களை அழைத்து அவர்களு டன் நடத்திய கலந்துரையாடலின் பிரகாரம் இந்த நிறுவனங்களுக்கு நிதி வழங்கும் வெளிநாட்டு நிறுவ னங்களையும் இணைத்து, பாதிக் கப்பட்ட கிராமங்களை புனர்நிர்மா ணம் செய்வதற்கான பொறுப்பைப் பகிர்ந்தளித்துள்ளோம். நலன்புரி நிலையங்களில் இருப்போரை தற் காலிகக் கொட்டகைகளை அமைத் துத் தங்கவைப்பது, அவர்களுக் கான நிரந்தர வீட்டுத் திட்டங்களை ஏற்படுத்துவது மற்றும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத் தல் முதலான சகல பணிகளையும் குறிப்பிட்ட கிராமங்களைப் பொறுப் பேற்றுக் கொண்ட நிறுவனங்களே மேற்கொள்ள ஒழுங்குகளை ஏற் படுத்திக் கொடுத்துள்ளோம். இவ் வாறான நடைமுறையை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் மேற் கொள்ளலாம் எனச் சுட்டிக்காட்டி னோம்.



எனினும் அந்தப் பிரதேசங்களில் இந்த நடைமுறையை மேற்கொள்ள அரச அதிபரும், ஒரு சில நிறுவ னங்களும் இணங்க மறுத்த சூழ் நிலை இருந்தது. எனினும் நாம் இந்த விடயத்தை வலியுறுத்தி னோம். இது தொடர்பாக நாமும், அரச அதிபரும், நிறுவனங்களின் பிரதிநிதிகளுமாக கூடி ஆராய்ந்து, ஒரு தீர்மானத்துக்கு வருவோம் எனக் கூறியதையடுத்து, எந்தெந்த நிறுவனங்களுக்கு எந்தெந்தப் பகு திகள் எனத் தீர்மானிக்க ஒரு சந் திப்பு நடைபெறுவதாக இருந்தது. எனினும் திரும்ப ஒரு அறிவித்தல் கிடைத்தது.

'திருமலை மாவட்டத்தில் எந்தெந தப் பகுதியில் எந்தெந்த நிறுவனங் கள் பணியாற்றுவது என்பது குறித்து தீர்மானிப்பது திருமலை யில் அல்ல. அவை குறித்து ஜனா திபதியே தீர்மானிப்பார். அவரது தீர்மானம் குறித்த விபரம் பின்னர் அனுப்பி வைக்கப்படும்' என அந்த வறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந் தது. அதனால் அச்சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டது. *(தொடரும்...)*

## தவக்கால நற்சிந்தனை

**"உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று"**
**(மத்.9.22)** மோ.தார்சீசியஸ்



தொழுகைக் கூடத் தலைவன் தன் மகன் இறந்தது பற்றிக் கூறி, இயேசு கையைவைத்தால் அவன் உயிர் பெறு வான் என்றார். இதேபோல் இரத்தப் போக்கினால் வருந்திய பெண் அவரது ஆடையைத் தொட்டாலே போதும். குணம் பெறலாம் என்று நம்பினாள். தொட்டாள், குணம்பெற்றாள். இந்த இருவரின் விசுவாசமும், நம்பிக்கையும் மேலானவை. விசுவாசம் என்பது கடவுளின் கொடை. விசுவாசம் புத்தியை மட்டும் சார்ந்தது அல்ல. இதயத்தையும் சார்ந்தது. இதயத்தி லிருந்து விசுவாசம் தளிர்விட்டு புத்திக்குச் சென்று முழு வடிவம் பெறுகிறது. விசுவாசத்தின் நிறைவு செயலில் முடிய வேண்டும். நம்பிக்கை செயல்வடிவம் பெறாவிட்டால், தன்னிலே உயிரற்றதாகும். குணமடைந்த பெண் இயேசு வின் ஆடையைத் தொட்டாள். செபக் குழுத்தலைவர் காலம் தாழ்த்தினாலும் நம்பிக்கை வைத்தார். நம்பியதைச் செய லில் காட்டினார். தன் குணம் கிடைத்தது. நம்பிக்கையும், செயலும் இணையும்போது நாம் கடவுளுக்கு ஏற்புடைய வர்கள் ஆகிறோம்.

# நேபாள இராணுவம் தாக்குதல்; 30 மாவோ கிளர்ச்சிவாதிகள் பலி

(காத்மண்டு)

**நேபாளத்தில் தாம் நடத்திய தாக்குதலில் 30 மாவோ கிளர்ச்சி வாதிகள் உயிரிழந்ததாக நேபாள இராணுவம் அறிவித்துள்ளது. இந்தச் சம்பவம் மேற்கு நகரமான சான்ட்கிக்கார்காவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.**

இந்த மாவட்டத்திலுள்ள படையினரின் மாவட்ட தலைமை அலுவலகத்தை கிளர்ச்சிவாதிகள் தாக்க முற்பட்ட வேளையே, இந்தப் பதில் தாக்குதல் படையினரால் நடத்தப்பட்டதாக படைத்தரப்பு தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் தமது தரப்பில் எவ்வித உயிர்ச்சேதங்களோ, காயங்களோ ஏற்படவில்லையெனத்



தெரிவித்த இராணுவம் – தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திலிருந்து குண்டுகள், கண்ணிவெடிகள் மற்றும் கிளர்ச்சி வாதிகளின் ஆவணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மூன்று நாள் விஜயமாக இந்தியா சென்றுள்ள நேபாள வெளியுறவு அமைச்சர் றமேஷ் நாத் பாண்டேயுடன், இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் சந்தித்துக் கலந்துரையாடலை நடத்தியுள்ளார். இதன் போது நேபாளத்தில் மிக விரைவில் மன்னர் கயனேந்திரா பல கட்சி ஜனநாயக அரசியல் நடைமுறையை ஏற்படுத்தவுள்ளாரெனத் தெரிவித்தார்.

அத்துடன், ஏன் மன்னர் கயனேந்திரா நேபாளத்தில் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தார்?

அரசியற்கட்சிகளை செயற்படவிடாமல் தடைசெய்துள்ளார். மற்றும் செய்தித் தணிக்கையை ஏன் அறிமுகப்படுத்தினார்? போன்ற விபரங்களை பாண்டே விளக்கினாரென இந்திய வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார்.

எனினும் நேபாளத்திலுள்ள சகல கட்சிகளும் ஒன்றிணைந்து தேசியரீதியிலான சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டுமென இந்தியா தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் பாரிஸில் நடந்த நேபாளத்துக்கான



உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்ட நேபாள நிதியமைச்சர் மட்குகர் சம்சர் – பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு உதவி வழங்கும் நாடுகள் தமது நிதியை வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

ஆனாலும் அவசரகாலநிலைப் பிரகடனம் முடிவுக்கு வந்தாலே மேலதிக நிதியுதவி வழங்கப்படுமென உதவி வழங்கும் நாடுகள் தெரிவித்ததாக நிதியமைச்சர் தெரிவித்தார்.

# ஆப்கான் அரசாங்க ஆலோசகரான பிரிட்டன் பிரஜை சுட்டுக் கொலை!

(காபூல்)

ஆப்கான் அரசாங்கத்தின் ஆலோசகராகக் கடமையாற்றிய பிரிட்டிஷ் பிரஜை ஒருவர், இனந்தெரியாத ஆயுதபாணிகளால் தலைநகர் காபூலில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில் மக்கியூன் என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். தலைநகர் காபூலிலுள்ள ஐ.நா அலுவலகம் மற்றும் டென்மார்க் தூதரகத்துக்கு அருகிலுள்ள பிரதான வீதியில் இவர் தனது காரில் தனியாக சென்று கொண்டிருந்த வேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தச் சம்பவம் தொடர்பாக தெளிவான விபரம் எதுவும் கிடைக்கவில்லை. ஆனாலும் பிறிதொரு வாகனத்தில் வந்தவர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டிலேயே மக்கியூன் உயிரிழந்ததாகவும், துப்பாக்கிச்சூட்டை நடத்தியவர்கள் தாக்குதலை நடத்தியவுடனேயே தப்பிச்சென்று விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட மக்கியூன் ஆப்கானின் கிராமிய புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகராகப் பணிபுரிந்தவராவார். இந்த அமைச்சின் நோக்கம் – ஆப்கான் விவசாயிகளால் செய்கை பண்ணப்படும் போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படும் ஓப்பியம் செடிகளை குறைப்பதாகும்.

மக்கியூம் இலக்கு வைக்கப்பட்டமைக்கான காரணம் எதுவும் தெரியவில்லை. இவர் தனது பணிக்கான ஒப்பந்தகாலம் முடிவடைந்து இந்த வார இறுதியில் பிரிட்டன் செல்ல விருந்தார்.

கடந்த சில மாதங்களாக அமைதியாக இருந்த ஆப்கான் தலைநகரம், தற்போதைய சூட்டுச் சம்பவத்திற்குப் பின்னர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மீளாய்வு செய்ய வேண்டிய நிலைக்கு கொண்டுவந்துள்ளதென காபூலிலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் அன்ட்ரூ நோர்த் தெரிவித்தார்.



சர்வதேச மகளிர் தினமான நேற்று ஈராக்கில் நடந்த பெண்களின் ஊர்வலமொன்றின்போது சர்வதேச தொண்டு நிறுவன பெண் பிரதிநிதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட பெண் ஒருவருக்கு மலர்ச்செண்டு ஒன்றைக் கொடுப்பதைக் காணலாம்.

## உலக நோக்கு

# நேற்றுமுன்தின வன்செயல்களில் ஈராக்கில் முப்பது பேர் உயிரிழப்பு!



(பாக்தாத்)

ஈராக்கில் நேற்றுமுன்தினம் இராணுவ தொடரணி, இராணுவ சோதனைச்சாவடி மற்றும் பொலிஸ் ரோந்துகள் ஆகியவற்றின் மீது கிளர்ச்சி வாதிகள் நடத்திய தாக்குதல்களில் படையினர் – பொதுமக்களென 33 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதல்களை தாமே நடத்தியதாக அமு – முசாப் அல் சர்காவி தலைமையிலான அமைப்பு இணையத்தளம் மூலம் உரிமை கோரியுள்ளது.

பகுபாவில் இடம்பெற்ற தாக்குதலில் 15 பேரும், பலட்டில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் 12 பேரும் கொல்லப்பட்டனர்.

பாக்தாத்தில் ஆயுதபாணிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு பொலிஸார் உயிரிழந்ததுடன், மற்றொருவர் படுகாயமடைந்தார். இதே பகுதியில் இடம்பெற்ற வீதியோர குண்டுவெடிப்பில் இருவர் கொல்லப்பட்டனர். பாக்தாத்தின் டூரா மாவட்டத்தில் முன்னாள் இராணுவ அதிகாரியான மஃமூட் குதீர் என்பவர் மோட்டார் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இதேவேளை, ஆயுதபாணிகளால் கடத்தப்பட்ட ஜோர்தானிய வியாபாரி நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார். இவரது விடுதலைக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்கள் கப்பமாக வழங்கப்பட்டதாக இவரது சகோதரர் தெரிவித்தார்.

இதனிடையே ஈராக்கில் அரசாங்கமொன்றை அமைப்பதற்குரிய இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாக குர்திஷ் கூட்டணி தெரிவித்துள்ளது. இதன்படி குர்திஷ் கூட்டணிகளின் தலைவர் ஜலால் தலபாணி ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார். அமைக்கப்படவுள்ள அமைச்சரவையில் நடந்து முடிந்த தேர்தலில் 40 ஆசனங்களைக் கைப்பற்றிய இடைக்காலப் பிரதமர் இயட் அலாவியின் கட்சி பங்கேற்க மறுத்துவிட்டதாக ஷியா கூட்டணி தெரிவித்த போதிலும் – இது தொடர்பாக அலாவியின் கட்சி எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை.

இதேவேளை, ஈராக்கின் தென் பகுதி நகரான சமவாவில் நிலை கொண்டிருந்த டென்மார்க் படையினர் தமது பணிநிறைவடைந்து தமது நாட்டிற்கு திரும்புவதையடுத்து, அந்த நகரை பிரிட்டன் படைகள் பொறுப்பேற்றுள்ளன.

இதனிடையே அமெரிக்கப் படையினரால் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த தமது நாட்டு படைவீரரின் கொலை தொடர்பாக அமெரிக்கா விசாரணை நடத்த வேண்டுமென பல்கேரியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

# ஒரு தொகுதி சிரியப் படையினர் லெபனானிலிருந்து வெளியேற்றம்



(டமஸ்கஸ்)

லெபனானிலுள்ள சிரிய படையினரை முற்றாக விலக்கிக் கொள்ளும் திட்டத்தில், ஒரு தொகுதி சிரியப் படையினர் நேற்றைய தினம் கிழக்குப் பகுதியிலுள்ள பெக்கா ஆற்றுப் பள்ளத்தாக்கிற்கு சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த படை விலக்கலானது லெபனான் மற்றும் சிரிய நாட்டு ஜனாதிபதிகள் டமஸ்கஸ்ஸில் சந்தித்து, பெக்கா ஆற்றுப்பகுதிக்கு படைகளைப் பின் நகர்த்துவது தொடர்பாக பேசி இணக்கப்பாட்டுக்கு வந்ததையடுத்து இடம்பெற்றது.

இதன்படி 15 ட்ரக்குகளில் இராணுவத்துக்கான உபகரணங்கள், ஆயுதங்கள், வெடிமருந்துகள் என்பவற்றுடன் ஒரு தொகுதி படையினர் கிழக்குப்பகுதியிலுள்ள பெக்கா ஆற்றுப் பகுதிக்கு சென்றனர்.

நேற்றைய தினம் கறுப்பு உடை அணிந்த சிலர் லெபனானின் தலைநகரில் வந்து ஒலிபெருக்கிகளைக் கட்டினர். பின்னர் மோப்ப நாய்களை கொண்டு வந்து வெடிகுண்டுகள் உள்ளனவா எனப் பரிசோதனை நடத்திய பின்னர், சிரியாவுக்கு நன்றி. எமக்கு வெளிநாட்டு தலையீடு வேண்டாமெனத் தெரிவித்தனர்.

இதேவேளை, லெபனானிலிருந்து சிரியப்படையினர் வெளியேறுவதை லெபனானைத் தலைமையகமாகக் கொண்ட ஹிஸ்புல்லா அமைப்பு எதிர்த்துள்ளது.

சிரியப் படையினர் வெளியேறினால், லெபனானில் அழிவுகள் ஏற்படுமெனவும், தமக்கு மேற்குலகின் எவ்வித தலையீடும் தேவையில்லையெனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

லெபனானிலுள்ள சிரியப் படையினரும், அவர்களது புலனாய்வுப் பிரிவும் முற்றுமுழுதாக வெளியேற வேண்டுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வொஷிங்ரனில் வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஸ்கொட் மக்கிளீலன் தெரிவிக்கையில் –

நாம் லெபனான் மக்களுடன் நின்று தெளிவாக சொல்கின்றோம் – ஐ.நாவின் 2004 ஆம் ஆண்டு தீர்மானத்தின்படி வெளிநாட்டுப் படையினர் லெபனானிலிருந்து வெளியேற வேண்டுமெனத் தெரிவித்தார்.



ஏற்கனவே பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் – லெபனானிலிருந்து சிரியா தனது படைகளை முற்றாக வெளியேற்ற வெண்டுமெனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலில் வங்கியூடான நிதிமோசடி பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது!

(டெல் அவிவ்)

இஸ்ரேலில் இடம்பெற்ற பாரியளவிலான வங்கியொன்றினூடான நிதி மோசடி தொடர்பான விசாரணைகளை இஸ்ரேலிய பொலிஸார் விரிவுபடுத்தியுள்ளனர்.

இதன்படி கடந்த ஞாயிற்றுக்கிழமை 25 வங்கி ஊழியர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 15 பேர் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இவர்களைவிட இந்த நிதி மோசடி தொடர்பாக வங்கியின் வாடிக்கையாளர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவரைவிட மேலும் 45 பேர் மிகவும் பாரிய சந்தேகநபர்களாக தேடப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வித தகவல்களும் இல்லாமல் வங்கியின் பணியாளர்கள் வாடிக்கையாளர்களூடாக பணப்பரிமாற்றத்தை மேற்கொண்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட வங்கி ஊழியர்களில் ஒருவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், எட்டுப் பேர் நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



சுமார் 375 மில்லியன் அமெரிக்க டொலர் மோசடிக்குட்படுத்தப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருவதாகவும், இந்த மோசடி 80 வங்கிக் கணக்குகளூடாக 170 வாடிக்கையாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இந்த நிதிகள் வங்கியின் மூலமாக பல நாடுகளுக்கு பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் பிரான்ஸ் நாட்டின் பெயரே தற்போது தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தலைநகரிலுள்ள வங்கியிலிருந்த சகல பணியாளர்களும் கைதுசெய்யப்பட்டனர்.

இஸ்ரேலின் வரலாற்றில் இவ்வாறு பாரிய நிதி மோசடி இடம்பெற்றமை இதுவே முதன்முறையெனத் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## பொதுக்கட்டமைப்பு தொடர்பாக

# நோர்வே தூதுவருடன் ஜயந்த தனபால பேச்சு

(கொழும்பு)

சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவுடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்றுமுன்தினம் மாலை 2 மணியளவில் கலந்துரையாடலொன்றை நடத்தினார்.

இந்தக் கலந்துரையாடல் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் பொதுக்கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது தொடர்பானதாக அமைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பாக நோர்வே தயாரித்த ஆவணத்தில் இலங்கையின் ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றை பேணும் வகையில் சில வாசகங்களை அரசாங்கம் நீக்கியுள்ளதால் நோர்வே தூதுவர் அதிருப்தி தெரிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்த ஆவணத்தில் விடுதலைப் புலிகள் தமது முன்மொழிவைத் தெரிவித்துள்ளனர். இதன்படி புனர்வாழ்வு அமைச்சை அரசாங்க மும் கொள்கை அபிவிருத்தி செயலகத்தை விடுதலைப் புலிகளும் பிரதிநிதித்துவப்படுத்தி கையெழுத்திடுவர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை நோர்வே தரப்பால் தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் அரசாங்கம் பல திருத்தங்களை மேற்கொண்டமை தொடர்பாக தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்கும் ஜயந்த தனபாலவுக்கும் இடையே விரிவான பேச்சுவார்த்தை நேற்றும் இடம்பெற்றதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

# இராணுவ ஆக்கிரமிப்பை சித்தரித்து சர்வதேச பெண்கள் தினப்பேரணி!

சர்வதேச மகளிர் தினமான நேற்று பெண்கள் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்களை சித்தரிக்கும் பேரணி ஒன்று இடம்பெற்றது. குடாநாட்டை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளதால் பெண்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் சிக்கல்களை சித்தரிக்கும் வகையில் மகளிர்தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இராணுவத்தினரால் சமூகத்தில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அழிவுகளை சித்தரிக்கும் உருவங்கள் நேற்று காலை முதல் கலட்டிச் சந்தியில் இருந்து பரமேஸ்வராச் சந்தி வரை வீதிகளில் வைக்கப்பட்டிருந்தன.

பின்னர் மாலை 6 மணிக்கு பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உருவங்கள் தீமூட்டி எரிக்கப்பட்டன.

பெண்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் செய்திகளை உள்ளடக்கிய தமிழ், ஆங்கில மொழிகளில் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் பரமேஸ்வராச் சந்திக்கு சமீபமாக உள்ள இராணுவத்தினருக்கும் வழங்கப்பட்டது.

இதேவேளை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய பகுதிகளிலும் மகளிர் தின நிகழ்வுகள் அந்தந்த பிரதேச மகளிர் அமைப்புக்களால் நடத்தப்பட்டது.

# மட்டக்களப்பு - கல்முனை வீதியில் கூடாரங்கள் அமைத்து மறியல்!

அம்பாறை - மருதமுனை பிரதேசத்தில், சுனாமி அனர்த்தத்தால் இருப்பிடங்களை இழந்தவர்கள் மட்டக்களப்பு - கல்முனை வீதியில் கூடாரங்கள் அமைத்து வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் நேற்றுக்காலைமுதல் அந்த வீதியூடான போக்குவரத்து சேவைகள் தடைப்பட்டன.

சுனாமியால் மருதமுனைப் பிரதேசத்தில் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளன. 250ற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இருப்பிடங்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதில் தொடர்ந்து ஏற்படும் தாமதங்கள். நிரந்தர வீடமைப்பதற்குரிய காணிகள் இதுவரை அடையாளம் காணப்படாமை. மற்றும் தமது மீள் குடியேற்றம், நிவாரணப் பணிகள் தொடர்பான நடவடிக்கைகளில் அரசியல்வாதிகளின் அசமந்தப் போக்கு ஆகியவற்றைக் கண்டிக்கும் வகையில் இந்த வீதிமறியல் போராட்டத்தில் தாம் ஈடுபட்ட தாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் கூடாரங்களை அமைத்து அங்கு சமையலில் ஈடுபட்டதுடன், மருதமுனை கிராமத்தின் இரு புற எல்லைகளிலும் மரக்குற்றிகள் போட்ப்பட்டு போக்குவரத்து சேவைகளும் தடைசெய்யப்பட்டன. (07)

# சமஷ்டி தீர்வின் மூலமே சமாதானம் உருவாகும்!

## ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார ஆணையாளர்

(ஒஸ்லோ)

ஒற்றையாட்சியின் கீழ் சமஷ்டித் தீர்வொன்றை இலங்கையில் ஏற்படுத்துவதே சமாதானத்துக்கான சாதகத்தன்மையக் கொண்டுவரும் என ஜரோப்பிய யூனியனின் வெளியுறவு ஆணையாளர் பெரேரா வோல்ட்னர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒஸ்லோ இணக்கத்தின்படி இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படுவதையே ஜரோப்பிய யூனியன் விரும்புகிறது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் உரியவகையில் பகிரப்படவேண்டும்.

அதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் சுனாமி அனர்த்தம் தொடர்பில் பொதுக்கட்டமைப்பு அவசியம் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

# 130 தற்காலிக வீடுகள் முல்லைத்தீவில் கையளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தற்காலிகக் குடியிருப்புக்களை அமைக்கும் வேலைத் திட்டத்தின்கீழ் நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் முல்லைத்தீவு உண்ணாப்புலவு என்னும் இடத்தில் 130 குடும்பங்களுக்கான தற்காலிக வீடுகளைக் கொண்ட மற்றுமொரு குடியிருப்பு திறந்துவைக் கப்பட்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்டு முல் லைத்தீவு - கள்ளப்பாடு கரையோரக் கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்து முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் பராமரிக்கப்பட்டு வந்த குடும்பங்களே நேற்று குடியமர்த்தப்பட்டன. இந்த மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பொறுத்து ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் சமையல் உபகரணங்கள், உலர்உணவுப் பொருட்கள், படுக்கை விரிப்புக்கள் என்பன உட் பட தலா ஆயிரம் ரூபா பணமும் முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்டன.

இந்த வீடுகள் கையளிப்பு நிகழ்வில் - சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர்களில் ஒருவரான வின்சன் உட்பட முல்லை மாவட்ட சுனாமி அனர்த்த விசேட பணிப்பாளர் றெஜி, முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் ராமமூர்த்தி, தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள், கள்ளப்பாடு கிராம சேவையாளர், போராளிகள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

**சொல்ஹெய்ம்..**

நடத்துவதற்கே எரிக் சொல்ஹெய்ம் லண்டன் செல்லவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

**மட்டக்களப்பு...**

களை அமைத்து சந்தேகத்துக்கிடமான வாகனங்களை சோதனையிட்டு வருவதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேலும் குறிப் பிட்டார்.

**கதிர்காமர்..**

உடன்பாட்டுக்கு ஆபத்து நேர்ந்துள்ள அதே நேரம் - சுனாமி நிதியுதவிகளுக்கும் வெளிநாட்டு நிதியுதவிகளுக்கும் தடைகள் ஏற்பட்டிருக்கின்றன.

உலகவங்கியின் வதிவிடப் பிரதிநிதி தொடர்பாக ஜே.வி.பி. வெளியிட்ட கருத்து இதற்கு உதாரணமாகும். கதிர்காமர் பிரதமராவதற்கும் அனுரா பண்டாரநாயக்க ஜனாதி பதியாகப் பதவி வகிக்கவும் ஜே.வி.பியின் ஆதரவைப் பெறும் நோக்கிலேயே நாட்டைச் சீரழிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்றார்.

**புலிகள்...**

களின் புனரமைப்புப் பணிகளுக்கு உலகவங்கி 6 பில்லியன் ரூபாவை ஒதுக்க முன்வந்தது குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர் -

புலிகள் ஊடாக உலகவங்கி இந்த நிதியுதவியை வழங்க முன்வந்ததை ஐ.தே.க. வரவேற்கிறது.

வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடை போன்ற உதவிகள் எவையுமே அரசாங்கத்தால் வழங் கப்படவில்லை. அத்துடன், அங்குள்ள மக்கள் தமது இயல்பு வாழ்வைக் கட்டியெழுப்ப உதவுவதற்கு ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது அரசாங்கமும் தவறிவிட்டன.

சர்வதேச சமூகம் வழங்கிய நிதியுதவியை ஒழுங்கான முறையில் செலவு செய்வதற்கான திட்டவரைபுகள் எதையும் ஏனைய கட்சிகளுடன் இணைந்து மேற்கொள்ள அரசாங்கம் முன்வரவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**ஆயுததாரி...**

கிறது. சில ஆயுதங்களை நாங்கள் மீட்டெடுத்திருக்கிறோம்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் சிவில் நிர்வாகம் செய்கின்ற பொலிஸாரும் சரி, இராணுவமும்சரி ஆயுததாரிகளைக் கட்டுப் படுத்தவேண்டும். ஆயுதப்புழக்கம் இருப்பதை இராணுவம் ஊக்குவிப்பதுபோல் அவர்களது நடைமுறையிலிருந்து தெரிகிறது.

வெலிக்கந்த பிரதேசத்தில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டதற்கு விடுதலைப்புலிகள் மீது குற்றம் சுமத்துவது உண்மையிலேயே மிகவும் வேதனைக் குரிய விடயம். முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, சிங்கள மக்களாக இருந்தாலும் சரி ஒரு பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கின்ற எந்த மக்களும் இப்படியான அனர்த்தத்துக்குட்படுவது மிகவும் வேதனைக்குரிய விடயம்.

இதை நிறுத்துவதற்கு இந்தப் பகுதியிலுள்ள ஆயுததாரிகள் உடனடியாக கைதுசெய்யப்பட வேண்டும். இதைப் படைத்தரப்பு செய்யலாம்.

ஏன் அவர்கள் இதை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்? எங்களுக்குத் தெரிகிறது - ஒரு துப்பாக்கிச் சூட் டுச் சம்பவம் நடைபெற்றவுடன் உடனடியாக இராணுவ அதிகாரிகளிடமிருந்து வருவது தமிழீழ விடுதலைப் புலிகள்தான் இதைச் செய்துள்ளனர் என்று. இராணுவ உயரதிகாரிகள் உண்மை நிலையைக் கண்டுபிடித்து இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

**கிழக்கில்...**

வேண்டாமென்பதுதான்.

அத்துடன் இரண்டு தரப்பினரும் தமது சக்தியைப் பிரயோகித்து இவ்வாறான தாக்குதல்களை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென உறுதியாக கேட்டுக்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வயோதிபத் தம்பதி வாள்வெட்டில் காயம்!

## கலட்டியில் நேற்றிரவு சம்பவம்

வீட்டில் தனித்திருந்த வேளை - கணவனும், மனைவியும் இனந்தெரியாத நபர்களின் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்

நேற்றிரவு 7.30 மணியளவில் இராமநாதன் வீதியில் கலட்டி பிள்ளையார் கோவிலுக்கு சமீபமாக இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர் பிலிப் தர்மநாயகம் (வயது 64) இவரது மனைவியான தர்மநாயகம் புனிதவதி (வயது 57) ஆகிய இருவருமே வாள் வெட்டுக்கு இலக்கானவர்களாவர்.

நேற்றிரவு வீட்டில் இருந்த வேளை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவரின் வாய்களையும் துணியால் அடைத்துவிட்டு கணவர் மீது சரமாரியாக வாள்களால் வெட்டினர். பின்னர் மனைவியும் வாள்வெட்டுக்கு இலக்கானார்.

வெட்டுக் காயங்களுக்கு இலக்காகி இரத்தவெள்ளத்திலிருந்து இருவரும் அயலவரின் உதவியுடன் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். கணவனின் முதுகு மற்றும் கால்பகுதியில் பலத்த வெட்டுக் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

# கண்காணிப்புக்குழு அலுவலகம் வெலிக்கந்தவில் அமைப்பு!

(கொழும்பு)

பொலனறுவ மாவட்டத்திலுள்ள வெலிகந்த பகுதியில் அடிக்கடி இடம்பெற்றுவரும் தாக்குதல் சம்பவங்களை அடுத்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அங்கு அலுவலகம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்துள்ளது.

இன்றுமுதல் வெலிக்கந்தவில் இந்த அலுவலகம் செயற்படவுள்ளது. போர்நிறுத்த உடன்பாட்டுக்கமைய - கண்காணிப்புக்குழுவின் செயற்பாட்டுப் பிரதேசத்துக்குள் வெலிக்கந்த பகுதி உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தனபாக்கியம் பொன்னம்பலம்

காரைநகர் குமுழங்குழியைச் சேர்ந்த தனபாக்கியம் பொன்னம்பலம் அவர்கள் 07.03.2005 திங்கட்கிழமை சிவபாதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பொன்னம்பலத்தின் மனைவியும், காலஞ்சென்ற கதிர்காமவாசன் மற்றும் மகேஸ்வரி (ஜேர்மன்), மோகனாங்கி (சுன்னாகம்), காலஞ்சென்ற சிவஞானம், ஞானச்சந்திரன் (நீர்ப்பாசனத் திணைக்களம், யாழ்ப்பாணம்), ரஜனி ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராஜா (ஜேர்மனி), குமாரலிங்கம் (சுன்னாகம்), தனலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஷாந்தி (கனடா), பிரசாந்தி, சாந்தினி வாசன் கஜேன், கேமா, மயூரன், கஸ்தூரி ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் முன்பு (09.03.2005) நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டபோதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை (10.03.2005) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு (பு.நே) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமுழங்குழி,
காரைநகர். (சி/3886)

தகவல்:
பொ.ஞானச்சந்திரன் (மகன்)

## செல்லையா சரஸ்வதி

சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த செல்லையா சரஸ்வதி அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியலிங்கத்தின் மகளும், காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், செல்வராசா, யோகேஸ்வரன், இராசலெச்சுமி, இந்திராணி மற்றும் காலஞ்சென்ற பவளராணி, சிவராசா, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் துரைராசா, புஸ்பதேவி, சோதிவடிவேல், தர்மராசன், யோகநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.03.2005 புதன்கிழமை அவரது இல்லத்தில் 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பிள்ளைகள்

(இ)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை 2005 ஏப்ரல்


## உயிரியல் பகுதி – II

தொகுப்பு : பிரபல ஆசிரியர்


மூன்று மணித்தியாலம்

பகுதி - A

1. கீழேதரப்பட்டுள்ள படங்கள் மனிதப் பெண்ணின் சூலகம் , ஆணின் இனப்பெருக்கத் தொகுதி என்பவற்றைக் காட்டுகின்றன.




படம் 1



படம் 2

(A) (i) படம் ஒன்றில் A யிலிருந்து F வரையான பகுதிகளைப் பெயரிடவும்

A.................................. B ..................................

C.................................. D..................................

E.................................. F..................................

(ii) பகுதி E யினால் சுரக்கப்படும் ஓமோனைத் தந்து இது கருப்பைச் சுவரில் எவ்வாறான விளைவை ஏற்படுத்தும் எனவும் தருக.

..................................................................................................

(iii) பகுதி A யினால் சுரக்கப்படும் ஓமோனைத் தந்து அந்த ஓமோனின் பிரதான செயற்பாடு யாது எனவும் தருக.

..................................................................................................

(B) (i) சூல்கொள்ள பின்பு கருக்கட்டல் நிகழுமாயின், நுகம் கருப்பையினுள் பிரவேசிக்கும் முன் யாது நடைபெறும்?

..................................................................................................

(ii) கருப்பைச்சுவரில் முளையம் பதிக்கப்படுவதற்காகத் தோற்றுவிக்கப்படும் கட்டமைப்பு யாது?

..................................................................................................

(iii) பதித்தலின் ஆரம்பநிலையில் HCG யின் (human chorionic gonadotoplin) பிரதான தொழில் என்ன?

..................................................................................................

(iv) வளர்ச்சியடையும் முளையத்திற்குப் போசனை வழங்குவதில் சூல்வித்தகம் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றது.

..................................................................................................

(v) முலைப்பாலில் எக்கூறுகள் அடங்குகின்றன?

..................................................................................................

(vi) மாதவிடாய்ச் சக்கரம் என்றால் என்ன?

..................................................................................................

(C) (i) பின்வரும் எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆண் இனப்பெருக்கத் தொகுதியின் பகுதிகளைப் படத்தில் குறித்துக் காட்டுக.

A – விதை B – விதைமேற்திணிவு

C – அப்பாற்செலுத்தி D – முன்னிற்கும் சுரப்பி

E – சிறுநீர் சனனப் பாதை

(ii) விதை ஏன் வயிற்றறைக்கு வெளியே வைக்கப்பட்டுள்ளது?

..................................................................................................

(iii) விதையில் காணப்படும் சேற்றோலிக் கலங்களின் தொழில் என்ன?

..................................................................................................

(iv) விந்தாக்கத்தில் பங்கு கொள்ளும் ஓமோன்களைத் தருக.

..................................................................................................


(v) பிரசவத்தின்போது பின்வரும் ஓமோன்களின் தொழில் என்ன?

a. Oestrogen : ..................................................................

b. Relaxin : ..................................................................

c. Otytocia : ..................................................................

02. படம்




(A) (i) தரப்பட்ட படத்தைப் பெயரிடுக.

..................................................................................................

(ii) படத்தில் A யிலிருந்து J வரையிலான பகுதிகளைப் பெயரிடுக.

..................................................................................................

(B) (i) பகுதி யில் காணப்படும் 4 கட்டமைப்பு இயல்புகளைத் தருக.

..................................................................................................

(ii) படத்தில் தரப்பட்ட கலன் இழையம் தோற்றுவிக்கப்படுவதற்கு மூலாதாரமாக அமைந்த இழையம் எது?

..................................................................................................

(iii) இருவித்திலை வகையான ஒரு வித்திலைத் தாவரத்தின் கலன் கட்டுக்களுக்கு இடையிலுள்ள பிரதான வேறுபாடுகள் இரண்டு தருக.

a..................................................................................................

b..................................................................................................

(iv) இருவித்திலை இலைகளில் மட்டும் காணப்படும் இழையம் எது?

..................................................................................................

(v) மேற்தரப்பட்ட இழையத்தில் காணப்படும் கட்டமைப்பு இயல்புகள் எவ்வாறு ஒளித்தொகுப்புச் செயற்பாட்டில் உதவுகின்றன எனத் தருக.

..................................................................................................

(C) (i) இலையொன்றில் ஒளித்தொகுப்புச் செயற்பாடு நிகழும் பிரதேசத்தை இனங்காண உமக்கு உதவிய குறுக்குவெட்டு முகத்தில் அவதானிக்கவுடிய இயல்புகளைத் தரு க.

..................................................................................................

(ii) தாவரங்களின் ஒளித்தொகுப்பு விளைவுகள் எவ்வடிவில் கடத்தப்படுகின்றன.

..................................................................................................

(iii) தாவரங்களில் சேதன உணவு கடத்தப்படுதலை விளக்கும் பொறிமுறை எவ்வாறு அழைக்கப்படும்.

..................................................................................................

(iv) இலையிலிருந்து சேமிக்கப்படும் அங்கத்திற்கு சேதன உணவு கடத்தப்படும் முறையின் மூன்று பிரதான படிகளையும் பெயரிடுக.

3) (A) (i) உயிர்ப் பல்வகைமை என்றால் என்ன?

..........................................................................................

(ii) செந்தரவுப் புத்தகம் என்றால் என்ன?

..........................................................................................

(iii) உயிர்ப் பல்வகைமை பாதுகாக்கப்படும் இரு பிரதான முறைகள் என்ன?

..........................................................................................

(iv) மேற்கூறப்பட்ட இரு முறைகளுக்குமிடையிலுள்ள பிரதான வேறுபாடு என்ன?

..........................................................................................

(B)(i) உடற்குழி என்றால் என்ன?

..........................................................................................

(ii) கூர்ப்பின் விளைவாக தோன்றிய உடற்குழி கொண்ட முதலாவது பிரதான விலங்குப் பிரிவு எது?

..........................................................................................

(iii) **Annela** களில் காணப்படும் நான்கு முக்கிய அடிப்படை இயல்புகளைத் தருக.

..........................................................................................

(iv) **Anaelid Arthropoda** இரண்டிற்கும் பொதுவான பாகுபாட்டில் பயன்படுத்தப்படும் பிரதான புற இயல்பொன்றைத் தருக.

..........................................................................................

v) தரைவாழ்க்கைக்கு ஏற்ற வகையில், பூச்சிகளில் காணப்படும் இரு இயல்புகளைத் தருக.

..........................................................................................

C) (i) பூச்சிகள், மீன்கள், முலையூட்டிகள் என்பவற்றில் தொழிற்படும் பிரதான சுவாச அங்கங்களை தருக.

..........................................................................................

(ii) திமிங்கலம் கரையில் ஒதுக்கப்படும் நீருள் வெளியே வருமாயின் அது இறந்துவிடும் அதற்கான காரணம் என்ன?

..........................................................................................

(iii) மனிதன் **Primates** பிரிவில் உள்ளடக்கப்படுவதற்கேற்பகொண்டிருக்கும் சிறப்பியல்புகள் ஐந்து தருக.

..........................................................................................

4) a) இலிங்கமுறை இனப்பெருக்கத்திற்கும், இலிங்கமில்முறை இனப்பெருக்கத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் மூன்று தருக.

இலிங்கமுறை ........................ இலிங்கமில் முறை ........................

B) இலிங்கமுறை இனப்பெருக்கத்தைக் காண்பிக்காத தற்போசணை அங்கிக் கூட்டம் ஒன்றைப் பெயரிடுக.

..........................................................................................

c) கீழே தரப்பட்ட இனப்பெருக்க முறைகளைக் காண்பிக்கும் ஒவ்வொரு அங்கியைத் தருக.

..........................................................................................

(i) தூளியம் உருவாக்கம் : ........................


(ii) சிற்றடி விந்தி உருவாக்கம் : ........................

(iii) அரும்புதல் : ........................

(iv) பிளவு : ........................

(v) கோணி வித்தி உருவாக்கம் : ........................

d) பங்கசு ஒன்றின் வாழ்க்கை வட்டம் கீழே தரப்பட்டுள்ளது




(i) மேற்தரப்பட்ட பங்கசு உள்ளடக்கப்படும் வகுப்புக்குரிய இரு சிறப்பியல்புகள் தருக.

..........................................................................................

(ii) மேற்தரப்பட்ட வாழ்க்கை வட்டத்தை உடைய உ தாரணம் ஒன்று தருக

..........................................................................................

(iii) மேற்தரப்பட்ட வாழ்க்கை வட்டத்திலுள்ள A யிலிருந்து F வரையான பகுதிகளைப் பெயரிடுக

..........................................................................................

(iv) ஆகாரிக்கசின் எக்கட்டமைப்பு கோணிக்கனியுடன் ஒப்பிடக்கூடியது

..........................................................................................

(v) இலிங்கமுறை இனப்பெருக்கத்தின் போது நுக வித்தி உருவாக்கப்படும் பங்கசு ஒன்றைப் பெயரிடுக. ........................

e) காபன் சக்தித மூலகங்களாக சேதனப் பதார்த்தங்களுடன் தொழிற்படும் இரு போசனை முறைகளைத் தந்து அம்முறைகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

*போசனை முறை* *உதாரணம்*

..........................................................................................

f) **Bryophyta** வை விட **Pterophyta** தரை வாழ்க்கைக்கு கூடிய இசைவாக்க மடைந்தது. **Nephrolepos** ஐ அடிப்படையாகக் கொண்டு மேற்கூறப்பட்ட கூற்று பொருத்தமற்றது எனக்காட்ட ஐந்து இயல்புகள் தருக.

..........................................................................................

g) √ அல்லது X என்னும் அடையாளத்தை பயன்படுத்தி பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி பூரணப்படுத்துக.

..........................................................................................

| இயல்பு | போக னேற்றம் | பெபிரோ லெப்பஸ் | செலாஜி னெல்ல | சைக்கசு | தென்னை |
|---|---|---|---|---|---|
| (1) முட்டை காணப்படும் | | | | | |
| (2) வேர் காணப்படும் | | | | | |
| (3) வித்திக்கலன் காணப்படும் | | | | | |
| (4) கலன் இழையம் உண்டு | | | | | |
| (5) கருக்கட்டலுக்கு புறநீர் தேவையில்லை | | | | | |
| (6) இரட்டைக் கருக்கட்டல் | | | | | |
| (7) பல சவுக்குமுளை அல்லது பல பிசிர் கொண்ட விந்து | | | | | |
| (8) இருமடியான புணரித்தாவரம் | | | | | |
| (9) மகரந்தக் குழாய் தோன்றும் | | | | | |
| (10) வித்தித் தாவரம் ஆட்சியாணை | | | | | |

# பகுதி II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1) (a) மனித உணவுக்கால்வாய்த் தொகுதியின் பகுதிகளைத் தருக.

..........................................................................................

(b) வயிற்றுப்பகுதியில் அமைந்த உணவுக்கால்வாய் பகுதிகள் எல்லவற்றையும் விளக்கி அவற்றின் அமைவிடங்களையும் தருக.

..........................................................................................

2 (a) ஆவியுயிர்ப்பு வீதத்தைப் பாதிக்கும் காரணிகள் எவை எனத்தருக.

..........................................................................................

(b) இலைவாயினூடாக ஆவியுயிர்ப்பு எவ்வாறு நிகழ்கின்றது என விளக்குக.

..........................................................................................

3 சுருக்கமாக விளக்குக.

(a) தெறிவில் : ........................

(b) மனிதனின் மார்பு வளையம் ........................

(c) வல்லுருக்கலவிழையம் : ........................

4 (a) மெண்டலின் முதலாம் - இரண்டாம் விதிகளைத்தருக.

..........................................................................................

(b) முதலாம் விதி தொடர்பாக மெண்டலின் விதிதங்களை விளக்குக.

..........................................................................................

(c) கறுப்பு நிற எலியொன்று வெள்ளை நிற எலியுடன் இனங்கலக்கப்பட்டபோது பெறப்பட்ட விளைவுகள் யாவும் கறுப்பு நிறமானவை. இவ் எச்சங்களின் மூன்று சோடிகளான ABC தேர்ந்தெடுக்கப்பட்டது. அச்சோடிகளுக்கிடையே கலப்பின் விருத்தி மேற்கொள்ளப்பட்டபோது பின்வரும் முடிவுகள் பெறப்பட்டது.

| எச்சச்சோடி வெள்ளை | தோன்றிய கறுப்பு மகட்சந்ததியின் எண்ணிக்கை | தோன்றிய மகட்சந்ததியின் எண்ணிக்கை |
|---|---|---|
| A | 6 | 2 |
| B | 7 | 3 |
| C | 5 | 1 |

(1) மேற்தரப்பட்ட முடிவுகளிலிருந்து நீர் என்ன முடிவுக்கு வருவீர்

(2) F சந்ததியில் சாம்பல் நிற விளைவு பெறப்படுமாயின் மேற்தரப்பட்ட இயல்பு பற்றி நீர் என்ன முடிவுக்கு வருவீர்.

(3) பரிசோதனை தொடர்பான முடிவொன்றிற்கு நீர் வருமுன் அச்சோதனையை மீளச் செய்ய வேண்டியதன் அவசியம் யாது என விளக்குக.